# காதல் மன்னவா



## 1

அன்று காலை முதலே கவிதாவுக்கு ஒரே பரபரப்பாகி விட்டது.

முடிவு எடுத்தாக வேண்டும். முக்கியமான முடிவு! அவள் வாழ்க்கையைத் தீர்மானிக்கப் போகும் பெரிய ஆச்சரியக் குறி. என்ன முடிவு எடுக்கப் போகிறாள்? எப்படி எடுக்கப் போகிறாள்? அவளுக்கே தெரியவில்லை!



தலையை பிய்த்துக் கொள்ளும் அளவுக்கு குழப்பம். நிமிர்ந்து தந்தையைப் பார்த்தாள்.

கவலையின் ரேகை மேலும் படர அவளையே சோக மாய் பார்த்துக் கொண்டிருந்தார் தந்தை ராமனாதன்.

கவிதா கண்கள் படபடக்க முடிவு எடுக்க முடியாமல் திணறியது அவரை பாதித்திருக்க வேண்டும். முகத்தில் அவசரமாய் கனிவை வரவழைத்துக் கொண்டார்.

''ஒன்றும் அவசரமில்லை கண்மணி. இன்று பூராவும் நன்கு யோசித்து நாளை விஷயத்தைச் சொன்னால் போதும்...'' வலுக்கட்டாயப் புன்முறுவலுடன் எழுந்தவர் பக்கம் வந்து பரிவாய் அவளது தலையைக் கோதினார்.

இருபது வயது அழகுக் குமரியாய் கவிதா மாறியிருந் தாலும் அவரைப் பொறுத்தவரையில் கவிதா சிறு பெண்தான். குட்டிக் கவிதாதான். பரிவோடு அவர் வருட..... மருண்ட மான் விழிகளுடன் அழகு முகம் சிவக்க அவரையே ஏக்கமாய்ப் பார்த்த கவிதாவைப் பார்த்ததும் அவருள் பழைய நினைவுகள் ஊசலாடின.

அறியாச் சிறுமியாய் அவளை மார்பில் தூக்கிப் போட் டுக் கொண்டு வளர்த்தது... ஒட்டுப் புல்லாய் எப்போதும் அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டு வெளியே செல்ல வேண்டும் என்று கவிதா அடம் பிடித்தது... தினம் இரவு ஆனதும் வாய் முழுவதும் சப்பு கொட்டிக் கொண்டு அவரைத் தூங்க விடாமல் கதை சொல்ல சிணுங்கியது...

அந்தக் கவிதா குட்டியா இது? அவளா இப்படி மாறி விட்டாள்? அந்த நிலையிலும் வியந்து போனவராய்

அவளையே உற்றுப் பார்த்தவர் மறுகணமே மனைவியின் ஞாபகம் வந்தவராய் குனிந்து கொண்டார்.

அவள் வாசுகி இப்படித் தன்னையும் குழந்தைகளையும் அல்பாயுசில் தவிக்க விட்டுச் செல்லாமல் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? பொல்லாத நோய் அவளை இப்படி பாதியில் கொண்டு போய்விட்டதே...?

நினைப்பு கண்களை நனைக்க எதிரே சுவரில் மங்கள கரமாய் போட்டோவில் மாலையுடன் சிரித்துக் கொண் டிருந்த மனைவியின் புகைப்படத்தை வெறித்தார்.

வாசுகி இருந்திருந்தால் இந்நேரம் செல்ல மகளை இப்படித் தவிக்க விடுவாளா? அவளுக்கு நல்லது எது கெட்டது எது என்று நன்றாய் தெரியும். கவிதாவும் அவரும் இப்படித் திணறிக் கொண்டிருப்பதை ஒரு போதும் அனுமதிக்க மாட்டாள்.

ம்ஹூம்... எல்லாம்தான் காலம் கடந்து விட்டதே.... பொங்கிய சோகத்தை பெருமூச்சாய் விட்டவாறு தெளிந்து கொண்டவர் போல் கவிதாவைப் பார்த்தார்.

அவரது மனநிலையை புரிந்து கொண்டவள்போல் கவிதாவும் காது மடல்கள் அதிர தலையாட்டியவள், ''நீங்கள் சிறிதும் வருந்த வேண்டாம். சீக்கிரமே ஒரு நல்ல முடிவு எடுத்து விடுகிறேன் அப்பா...'' என்றாள் ததும்பும் குரலோடு.

ராமனாதன் அதன் பின் அங்கு இருக்கவில்லை. அவள் தனிமையில் நன்கு சிந்திக்கட்டும் என்ற நினைப்பு தோன்றியவராய் அகன்று விட்டார்.



அவர் நினைத்தது போல் கவிதாவால் அவ்வளவு எளிதில் சிந்திக்கவோ முடிவெடுக்கவோ முடியவில்லை. நினைவுகள் ஒன்றுக்குப் பின் ஒன்று முரணாய் தோன்றி அவளை வாட்டியெடுத்தது.

விஷயம் இதுதான். ஒன்று அவள் தனது எம்.ஏ. இரண் டாம் வருட படிப்பைத் தொடர வேண்டும். அல்லது கல் லூரிப் படிப்பை நிறுத்தி விட்டு உடனடியாக ராஜாவை திருமணம் செய்துகொள்ள வேண்டும்.

இந்த இரண்டில் எதையாவது ஒன்றை அவள் முடி வெடுத்தாக வேண்டும். அதுவும் இன்று ஒரு நாள் அவ காசத்தில் அந்த 'முடிவை' அவள் ராஜாவுக்கு தெரிவித் தாக வேண்டும்.

என்ன ஒரு இக்கட்டான நிலை?

நினைக்க நினைக்க கவிதாவிற்கு சுருள் கேசத்தை அலட்சியமாய்த் தள்ளி வேல் குத்தும் பார்வையுடன் அவளைத் துளைத்த ராஜாவின் கோபமான முகம்தான் ஞாபகத்திற்கு வந்தது.

'இதில் யோசிக்க என்ன இருக்கிறது? பேசாமல் மண வறையில் குனிந்து கழுத்தை நீட்ட வேண்டியது தானே?' என அவன் விளாசிய போது அவன் குரலில் அகம்பாவம் பெரிதும் தொனித்திருப்பதாய் உணர்ந்தாள். 'படித்து என்ன கிழிக்கப் போகிறாய்? பேசாமல் என்னைக் கட்டிக் கொண்டு கிட!' என்பதே அவனது எண்ணம் போல் தெள்ளத் தெளிவாய் அவளுக்குப் புரிந்தது.

அந்தக் கணமே அவளது பிடிவாதமும் சுய கௌரவ மும் விழித்தெழுந்து கொண்டது. ''கண்டிப்பாக நான்

யோசிக்க வேண்டும்!'' என்று ராஜாவிடம் சொல்லி விட்டாள் அழுத்தந் திருத்தமானக் குரலில்.

ராஜா இதை சற்றும் எதிர்பார்க்காதவன் அவளையே விழுங்குவது போல் ஒரு முறைப்புப் பார்வை பார்த்து விட்டு கோபம் பொங்க அகன்று விட்டான்.

அந்தக் கோபத்திலும் அவனது சிவப்பு பளபளப்பு முகத்தில் துடிக்கும் முறுக்கேறிய மீசை உணர்ச்சிகளை சடார் சடாரென மாற்றித் துளைக்கும் பார்வையுடன் தாண்டவமாட விடும் கூர்மையான அவனது கண்கள் எல்லாம் அவளை என்னவோ செய்தது.

சிலமுறை அவனது இந்த கம்பீரத்தில் மயங்கி கண் இமைக்காது ரொம்ப நேரம் கவிதா ரசித்ததும் உண்டு. ஆனால் இப்போது அதற்கு நேரம் அல்லவே. அவளது கம்பீரம் இப்போது ஆளுமையாய் தன்னை அடக்கி ஒடுக்கி அடிமையாய் ஆக்கும் ஆணவமாய் அல்லவா எதிரொலிக்கப் பார்க்கிறது.

அதை எப்படி அவள் அனுமதிக்க முடியும்?

கவிதா யோசித்தாள். இக்கட்டான சூழ்நிலை. அப்பா ரிட்டையர் ஆகி விட்டார். இனி குடும்ப பாரம் முழுவதும் அவரது பென்ஷனில் தான் ஓட்ட வேண்டும். ராஜா அவளது சொந்த அத்தைப் பையன். சொந்தத் தொழிலில் முன்னேறி நல்ல நிலையில் இருக்கும் பெரும் பணக் காரன்.

அவன் சூழ்நிலை புரிந்து காயை நகர்த்துகிறான். பேசா மல் என்னைக் கட்டிக் கொள். உன் தந்தையை இரண்டு



தம்பி தங்கைகளையும் பராமரித்து ஆளாக்க வேண்டியது என் பொறுப்பு. எல்லாவற்றையும் நான் கவனித்துக் கொள்வேன். நீ செய்ய வேண்டியது உன் படிப்பை நிறுத்தி விட்டு குடும்பத் தலைவியாய் என் மனைவியாகிட வேண்டியது புரிகிறதா?

ராஜா சொல்வது இதுதான். பெரும் கம்பீரமும் ஆளு கையும் கொண்ட அவனது அழகு அவளைக் கவர்ந் ததுதான். அவனைக் கட்டிக் கொள்ள கசக்கவில்லைதான். சொல்லப் போனால் கவிதா இதற்கு கொடுத்து வைத் திருக்க வேண்டும்.

ராஜாவின் அழகுக்கும் அந்தஸ்திற்கும் அவன் கை தட்டினால் போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள். பெண் கொடுக்க கியூவில் வந்து நிற்பார்கள். ஆனால் ராஜா எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டான்.

கவிதாவைத் தான் அவனுக்குப் பிடித்திருக்கிறது. அவன் மனங்கவர்ந்த மயிலாள் கவிதாதான். தனக்காக அவன் ஏங்காத குறையாய் பெண் கேட்பது கவிதாவுக்கு உள்ளூர பெருமிதமாகத்தான் இருந்தது. ஆனாலும் ஏதோ ஒன்று இடித்தது.

அவளுள் வைத்த கற்பனைகள். மனதுள் கட்டிய கோட்டைகள் எதிர்கால லட்சியங்கள் எல்லாம் ஒரே நொடியில் தூள் தூளாகி விடுவது போல் உணர்ந்தாள். ராஜாவின் மனைவியாகி விட்டால் 'ஹவுஸ் ஒய்ஃப்' என்ற வட்டத்தில் அவள் கனவுகள் எல்லாம் சிறைபட்டு விடும்.

சாதாரண குடும்பப் பெண்ணாய் பிள்ளை பெற்றுக் கொண்டு புருஷனுக்கு பணிவிடை செய்து கொண்டு ஓட்டும் வாழ்க்கையை... அவளால் இப்போது கற்பனை செய்யக் கூட முடியவில்லை. அவள் மனதிற்கு அது ஒரு போதும் ஒவ்வாது.

'பெண் என்றால் கட்டுப் பெட்டியாய் புருஷன் சொல் கேட்டு வீட்டிலே அடங்கி இருப்பது பெரும் அடிமைத் தனம்தான்...' என எத்தனைக் கல்லூரிப் பட்டிமன்றங் களில் வாய் கிழியப் பேசியிருக்கிறாள்...? அப்படிப் பட்ட வள் எந்த ஒரு முயற்சியும் செய்யாமல் வலிய வருகிறது என ஒரு சாதாரண 'ஹவுஸ் ஒய்ஃப்' வாழ்க்கையை ஏற்றுக் கொள்வதா?

கவிதா நெடுநேரம் யோசித்து தீர்மானமாய் அந்த எண்ணத்திற்கு வந்தாள். 'ராஜாவை திருமணம் செய்து கொள்ள இஷ்டமில்லை...' என்று சொல்லி விடுவ தென்று.



## 2

கவிதா அவசரப்படவில்லை. முதலில் தான் எடுத்த முடிவை தந்தையிடம் சொல்லி அவரது கருத்தை அறிய முயன்றாள்.



தந்தை ராமனாதனிடம் அவள் தன் முடிவு பற்றிச் சொன்னபோது அவர் சிரிப்பு மாறாமல் அவளைப் பார்த் தார்.

''சந்தேகமில்லை! நான் நினைத்த மாதிரிதான் நீ முடிவு எடுத்திருக்கிறாய்... கவிதா...!'' என்றார்.

''என்ன... இப்படித்தான் முடிவு எடுப்பேன் என்று நினைத்தீர்களா?'' கவிதா ஆச்சரியப்பட்டு வினவ எழுந்து அவள் பக்கம் வந்த ராமனாதன் செல்லமாய் அவளது தோள்களை தட்டினார்.

''எனக்கு உன்னைப் பற்றி தெரியாதா?'' என்றவர். ''கண்மணி இயல்பிலே உனக்கு தன்மானமும் சுயகௌர வமும் ஜாஸ்தி... அடுத்தவர் காலில் பாரமாய் நிற்க நீ ஒருபோதும் விரும்ப மாட்டாய். அதனால் நீ இப்படி ஒரு முடிவு எடுப்பாய் என்று தெரிந்தே நானும் ஒரு முடிவை எடுத்து விட்டேன்...''

ராமனாதன் பீடிகையுடன் சொல்லி விட்டு நிறுத்த ஆச்சரியம் அடங்காதவளாய், ''நீங்களும் ஒரு முடிவு எடுத்தீர்களா?'' என்றபடி கண்கள் படபடக்க கவிதா பார்த்தாள்.

ராமனாதன் உற்சாகமாய் தலையசைத்தார். ''ஆமாம் கண்மணி ரிட்டையர்டு ஆகி விட்டதால் நான் ஒன்றும் சோம்பி வீட்டில் கிடக்கப் போவதில்லை. நானும் உழைக் கப் போகிறேன். சொந்தமாய் பிஸினஸ் ஒன்றும் தொடங்கப் போகிறேன்...!''

''சொந்த பிஸினஸா... என்னப்பா சொல்கிறீர்கள்?''

''ஆமாம் கவிதா என் பால்ய நண்பர் ஒருவருடன் பார்ட்னராய் சேர்ந்து இருவரும் சீட்டுக் கம்பெனி ஒன்றை ஆரம்பிக்கப் போகிறோம். சிறு சிறு வியாபாரிகளுக்குப் பைனான்ஸூம் செய்யப் போகிறோம். எனது பிராவிடண்ட் ஃபண்ட் பணம் ஒரு லட்சம் இருக்கிறது. என் நண்பரும் ஒரு லட்சம் போடுகிறார். ஆக இரண்டு லட்ச ரூபாய் முதலீட்டில் கம்பெனியைத் தொடங்கப் போகிறோம். அது விஷயமாய்த்தான் இரண்டு நாளாய் நானும் நண்பரும் பல இடங்களுக்கு சென்று தொழில் தொடங்குவது பற்றி விசாரித்து வருகிறோம்...''

ராமனாதன் சொல்லச் சொல்ல... கவிதாவுக்கு ஆச்சரியம் இன்ப அதிர்ச்சியாய் மாறி சந்தோஷம் பூத்து விட்டது. அது அவளுக்கு பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

வந்த ஆபத்து விலகியதுபோல் புத்துணர்வு கொண்டவளாய். ''நல்ல ஐடியா! சரியாகச் செய்தீர்கள். நீங்க சொன்ன மாதிரியே சீட்டுக் கம்பெனியை உடனே தொடங்குங்கள். நானும் தோளோடு தோளாய் உங்களுக்கு உதவுகிறேன். எனக்குத் தெரிந்தவர்கள் தோழிகள் என அனைவரையும் கான்வாஸ் செய்கிறேன். நாம் சொந்தமாய் முழு முயற்சி எடுத்து செய்வோம். சொந்தக் காலில் தலைநிமிர்ந்து நிற்போம். என்ன சொல்கிறீர்கள் அப்பா?'' என்றாள் உற்சாகமான குரலில்.

அவளின் உற்சாகம் ராமனாதனையும் உடன் தொற்றிக் கொண்டது.

''ஆமாம் அம்மா... எனக்கும் அதே யோசனைதான் கவலைதான். என்னதான் சொந்தம் என்றாலும் உன்னை வீட்டு மருமகளாய் அவர்களுக்கு கொடுத்து கூடவே நாங்களும் அவர்களுக்கு பாரமாய் உட்கார்ந்து நம் குடும்ப பொறுப்பை அவர்கள் தலையில் சுமத்துவது நன்றாகவா இருக்கிறது? அதனால்தான் இந்த முடிவிற்கு வந்தேன். கூடுமான வரை முயற்சி செய்வோம்... கடைசி வரை முயன்று பார்ப்போம்... மேலும்...''



ராமனாதன் ஏதோ சொல்ல வந்தவர் தயங்க, ''சொல்லுங்கள் அப்பா...'' என்று தயக்கம் நீக்கினாள் கவிதா.

''ராஜாவும் நல்ல பையன்தான். உனக்கு ஏற்ற துணைதான். நாம் சொந்தமாய் முன்னேறி ஒரு நல்ல நிலைக்கு வரும்போது அவனையே நீயும் கல்யாணம் செய்து கொள்ளலாம். என்னம்மா சொல்கிறாய்?''

ராமனாதன் இப்படிக் கேட்கவும் கவிதாவிற்கு வெட்கம் படர்ந்து முகம் சிவந்து விட்டது. அவளது உள்ளூர ஐடியாவும் அதுதான். ராஜாவுக்கு மனைவியாய் வசதியில்லாதவளாய் வழியில்லாதவளாய் போவதை விட ஒரு நல்ல நிலையில் எந்தவித குடும்ப பாரமும் இல்லாமல் போவதையே அவள் விரும்பினாள்.

அதையே ராமனாதன் உரைக்கவும் அவளது மகிழ்ச்சி பன் மடங்காயிற்று. உற்சாகமாய் சம்மதித்து தலையாட்டினாள் கவிதா.

அதற்குள் மதிய வேளை ஆகிவிட்டதால் பள்ளிக்குச் சென்றிருந்த இரண்டு தம்பி தங்கைகளும் திரும்பியிருந்தனர். அதிலும் மூத்த தங்கை வத்சலா கவிதாவைப் பார்த்ததும் ஓடிவராத குறையாய் பக்கத்தில் வந்தாள்.

''என்னக்கா முடிவு எடுத்தாயிற்றா?'' என்றாள் பட படப்புடன்.

மூச்சு வாங்க கேட்டவளை அதிசயமாய்ப் பார்த்து விட்டு செல்லமாய் அவள் தலையை வருடியவள், ''ஒன் றும் பயமில்லை வத்சலா. நாம் இங்குதான் இருக்கப் போகி றோம். அப்பா புதிதாய் தொழில் தொடங்கப் போகிறார்....'' என்றெல்லாம் ஆரம்பித்து விஷயத்தை விலாவாரியாகச் சொல்ல ஆரம்பித்தாள்.

கேட்கக் கேட்க வத்சலாவுக்கு குஷி வந்து விட்டது ப்ளஸ் டூ படிக்கும் அவள் தன் பள்ளியை, தோழிகளை விட்டு விட்டு வேறு ஊருக்குச் சென்று படிப்பைத் தொடருவது ஜீரணிக்க முடியாத விஷயமாய்த் தோன் றிற்று.

அவளுக்கு அடுத்தாற் போல் தங்கை கலா. பத்தாவது படிப்பவள். அடுத்து தம்பிகள் தினேஷ், கணேஷ் தினேஷ் ஆறாவது வகுப்பு; கணேஷ் ஐந்தாம் வகுப்பு விஷயம் கேள்விப் பட்டதும் எல்லோருக்கும் இனம் புரியாத குதூகலம்தான். கவிதா அவர்களது சந்தோஷத்தை ஆவலாய் ரசித்தாள்.

அவளது மகிழ்ச்சி எல்லாம் மாலை வரைதான். மாலை சொல்லி வைத்தாற்போல் ராஜா வந்து விட்டான். அவனது புதிய எஸ்டீம் காரிலிருந்து கம்பீரமாய் இறங்கி வருவதை ஜன்னல் வழியாய் கவிதா பார்த்து விட்டாள்.

திருச்சியிலிருந்து மூன்று மணி நேரம் அவனே டிரைவ் செய்து வந்திருக்கிறான். எந்தவிதக் களைப்புமில்லாமல் நுழைந்தவனைப் பார்த்ததும் கவிதாவிற்குத்தான் பட படப்பு அதிகமாகிவிட்டது.



வீட்டில் அப்பாவும் இல்லை. இந்நேரம் . பார்த்து வெளியே சென்று விட்டார். அவள் மட்டும் தனியே. ராஜாவிடம் என்ன சொல்லப் போகிறாள்? என்ன சொல்லி சமாளிக்கப் போகிறாள்?

அவளது படபடப்பை பதட்டமாக்கும் விதம்தான் ராஜாவும் நடந்து கொண்டான்.

விறுவிறுவென உள்ளே நுழைந்தவன் சுற்றும் முற் றும் பரபரப்பாய் பார்த்து விட்டு, ''என்ன ஒருவரையும் காணவில்லை? நீ... மட்டும்தான் இருக்கியாய்? பொருள் களை கூட பாக் செய்யாமல் என்னதான் செய்து கொண்டு இருக்கிறீர்கள்...?'' என்றான் கோபம் பொங்கியவனாய்..

கவிதாவிற்கு விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது என்று தெரியவில்லை. உதட்டைக் கடித்தபடி தயங்கினாள்.

அவளது தயக்கம் ராஜாவிற்கு எரிச்சலை ஏற்படுத்தி யிருக்க வேண்டும். ''பார்... உன்னைத்தான் கேட்கிறேன் பதில் சொல்....!'' என்றான் கடும் தொனியில்.

கவிதா இதற்கு மேல் தயங்குவது அர்த்தமில்லை என்று உணர்ந்தாள்... விஷயத்தை பட்டென உடைத்து விடத் தீர்மானித்தாள்.

''அது... வந்து... வந்து... நாங்கள் வேறு ஒரு முடிவை எடுத்து விட்டோம்..'' என்று தீர்மானமான குரலில் கவிதா உரைக்கும் போதே ராஜாவின் புருவம் உயர்ந்து விட்டது.

திரும்பி அவளை ஆச்சரியமாய்ப் பார்த்தான்.

''வேறு ஒரு முடிவா?''

''ஆம்... அப்பா சொந்தமாய் நண்பர் ஒருவருடன் சீட்டுக் கம்பெனி தொடங்க இருக்கிறார். அதனால்...''

''அதனால்?''

''தவறாக நினைக்காதீர்கள். நாங்கள் சொந்தக் காலில் எங்கள் உழைப்பிலே நிற்க விரும்புகிறோம். மேலும் எனக்கும் படிப்பை நிறுத்துவதில் இஷ்டமில்லை. தொடர்ந்து படிக்கவே விரும்புகிறேன் அதனால்...''

அவள் மேலே சொல்ல முயலுவதற்குள், ''நிறுத்து...!'' என்று கோபமாய் கைகளை உயர்த்தியபடி கத்தினான் ராஜா.

அரண்டு போய் பார்த்தவளை நேருக்கு நேராய் கண்களைத் துளைப்பதைப் போல் ராஜா பார்த்தான்.

''இந்தக் கதையெல்லாம் எனக்கு வேண்டாம். எனக்கு தேவை ஒரேயொரு பதில்தான். என்னைக் கட்டிக் கொள்ள உனக்கு இஷ்டமிருக்கிறதா... இல்லையா... அதற்கு மட்டும் பதில் சொல்...? ம் ம்?''

மிரட்டும் தொனியில் கோவைப் பழ சிவப்பாய் மாறிய சினம் பொங்கிய முகத்துடன் அவள் தோள்களை பிடித்து அப்படியே உலுக்கினான் ராஜா.

கவிதாவிற்கு வேறு வழியில்லை. தயங்கியவளாய் மெல்ல மெல்ல அந்த வார்த்தைகளை உச்சரித்தாள்.

அதைக் கேட்டதும் ராஜாவின் முகம் இருண்டு விட்டது. ''என்ன உனக்கு இஷ்டமில்லையா?'' நம்ப முடியாதவனாய் குரல் உடையப் பார்த்தவன் தன்நிலை இழந்தான் ஒரு நிமிடம். மறுகணம் சட்டென்று சுதாரித்துக் கொண்டான்.



அவனது முகம் இறுகிவிட்டது. பாறைமுகத்துடன் விடுவிடுவென அங்கிருந்து வெளியேறினான் ராஜா.



# 3

புயலடித்து ஓய்ந்தாற்போல் இருந்தது கவிதாவுக்கு. அவளாலே கொஞ்சமும் நம்ப முடியவில்லை. ராஜாவின் முகத்தை நேருக்கு நேராய்ப் பார்த்து எப்படி தன்னால். 'இஷ்டமில்லை' என்று சொல்ல முடிந்தது. சொன்னேன். என்றெல்லாம் நினைத்தாள்.

உள்ளுக்குள் ஆசையை வைத்துக் கொண்டு சூழ் நிலைக்காக அப்படியொரு பொய்யைச் சொன்ன போது அவள் இதயம் துடித்த துடிப்பு அவளுக்கு மட்டும்தான் தெரியும். வார்த்தைகளை எவ்வளவு கஷ்டப்பட்டு வெளியே கொண்டு வந்து கொட்டினாள்?

ஆனால்... ராஜா...? அதையெல்லாம் உணர்ந்த மாதிரி தெரியவில்லையே? இவள் சொல்வது பொய் என்பதைக் கூட உணராமல் அவனது முகம் எப்படி இருண்டு விட்டது? அவனது கம்பீரமான சிவப்பு முகத்தில் உள்ள அத்தனை செல்களும் துடித்து என்னையா இஷ்ட மில்லை என்று சொல்கிறாய்? என்று கேட்பது போல் அல்லவா இருந்தது?

அந்த ஒரு நிமிடத்தில், அவள் பதிலைச் சொன்ன அந்த ஒரு கணத்தில், அவன் முகத்தில் கோபம் தாபம் என் அத்தனை உணர்ச்சிகளுமல்லவா ஒருசேர தாண்டவமாடின?

ராஜா அப்படி விருட்டென வந்த வேகத்திலே வெளியேறிப் போனதும் கவிதா சோர்வு பொங்க அப்படியே நாற்காலியில் விழுந்தாள்.

நேருக்கு நேராய் எவ்வளவு பெரிய வார்த்தைகளைச் சொல்லி விட்டோம் என்ற துடிப்பு அவளை வாட்டியது. கண்களை மூடி தலைகவிழ்ந்து அந்த நிலையிலே எவ்வளவு நேரம் கிடந்தாள் என்று அவளுக்குத் தெரியாது.

தந்தை ராமனாதன் வெளியே சென்றிருந்தவர் வந்து அவள் தோள்களை உலுக்கிய போதுதான் சுயநினைவுக்கு வந்தாள்.

எழுந்து அரக்கப் பரக்க விழித்தவளை ராமனாதன் அமைதியாக்கினார். ''நிதானம்... நிதானமம்மா... என்ன நடந்தது?'' என்றார் கனவு பொங்க.

கவிதா படபடப்பை குறைத்தவள். ராஜா வந்த விஷயம் முழுவதையும் சொல்லி முடித்தாள் ''நான் நேருக்கு நேராய் இஷ்டமில்லை என்றதும் விருட்டெனத் திரும்பி போய் விட்டாரப்பா...!'' என ஆச்சரியம் குறையாமல் கவிதா சொல்லி முடித்ததும் ராமனாதனின் முகம் கவலையாகி விட்டது.

கவிதா அதைப் பார்த்து விட்டாள்.

''என்னப்பா நான் சொல்லியது தவறா?'' என்றாள் துணுக்குற்ற குரலில்.

''தவறுதான் அம்மா. முகத்திலடித்தாற்போல் பதில் கூறியிருக்கிறாய். நம் சூழ்நிலையை நன்கு அவருக்கு விளக்கிச் சொல்லியிருக்கலாம்... ஒருவேளை அவர் புரிந்திருக்கக் கூடும்..''



''ஆனால் அதற்கு அவர் கொஞ்சமும் இடம் தரவில்லைப்பா. வெட்டு ஒன்று துண்டு ஒன்றாய் அவருக்கு உடன் பதில் வேண்டுமாம். எனக்கே கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனாலும் வேறு வழி இல்லாமல் போயிற்று...'' தேம்பும் குரலில் கவிதா சொல்ல... மகளின் கவலையை புரிந்து கொண்டவராய் அவ்ளை தோளோடு அணைத்து தேற்றியவர், ''கவலைப் படாதே கண்மணி. எல்லாம் சரியாகி விடும். போகப் போக ராஜா நம்மைப் புரிந்து கொள்வார்...'' என்று ஆறுதலும் படுத்தினார்.

கவிதாவும் வேறு வழியில்லாமல் சமாதானப் பட்டுக் கொண்டாள். ராமனாதனுக்குத்தான் மனது ஆறவில்லை. என்னதான் இருந்தாலும் சொந்தம் விட்டு போய்விடக் கூடாது என்று பயந்தார்.

அதே எண்ணத்தில் தான் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை திருச்சிக்கு கிளம்பி விட்டார்.

''நான் ஒரு எட்டு போய் பார்த்து விட்டு வந்து விடுகிறேன். அக்காளிடமும் மாப்பிள்ளையிடமும். விஷயத்தை நம் சூழ்நிலையை விளக்கி தவறாக எண்ணிக் கொள்ளாதபடி.. பார்த்துக் கொள்கிறேன்...''

ராமனாதன் கவிதாவிடம் சொல்லிவிட்டு கிளம்பி விட்டார். கவிதாவிற்கும் அது நல்ல யோசனையாகவே பட்டது.

திருச்சி சென்று விட்டு அன்று மாலையே ராமனாதன் திரும்பி விட்டார். ஆவலாய் எதிர் நோக்கிய கவிதாவை. ''ஒன்றும் பயம் தேவையில்லையம்மா நான் எல்லாவற்

றையும் விளக்கிச் சொல்லிவிட்டேன். அவர்கள் புரிந்து கொண்டார்கள். என்ன... இந்த வயதில் புதிதாய் தொழில் தொடங்கி சிரமப்படவேண்டுமா... என்ற சடவுதான் அவர்களுக்கு. மற்றபடி அவர்கள் எதுவும் எண்ணாமல் அவர்களை சமாதானப்படுத்திவிட்டேன்...!'' என்று ராமனாதன் சொன்னதும்தான் கவிதாவிற்கு நிம்மதி மூச்சே வந்தது.

அத்தோடு எல்லாம் சரியாகிவிடும் என்ற கவிதா அந்த விஷயத்தை விட்டு விட்டாள். ராஜாவிடம் அப்படிச் சொன்னதை மறந்தும் போனாள்.

அவளது கவனம் முழுவதும் தந்தை ராமனாதன் சொன்ன சீட்டுக் கம்பெனி தொழிலில் திரும்பியது. எப்படியும் தொழிலை ஆரம்பித்து நல்லபடியாக நடத்தி குடும்ப நிலைமையை ஸ்திரப்படுத்தி விட வேண்டும் என்ற உறுதியோடு நினைத்தாள்.

இரவு பகல் பாராது தந்தையுடனும் சீட்டுக் கம்பெனி நடத்துபவர்களிடமும் தகவல் பெற்று ஆலோசனை நடத்தினாள். இறுதியில் ஒரு நல்லநாள் பார்த்து நண்பர் ஒருவரை பார்ட்னராய்க் கொண்டு ராமனாதன் கவிதாவின் பெயரிலே, 'கவிதா சிட்ஸ் அண்ட் பைனான்ஸ்' என்ற சீட்டுக் கம்பெனியைத் தொடங்கினார்.

ராமனாதனும் சளைக்காமல் முழு மூச்சில் உழைக்க ஆரம்பித்தார். தெரிந்தவர்கள், வியாபாரிகள், ஊர்ப் பெரியவர்கள் என்று ஒவ்வொருவராய் தேடிப் போய் சீட்டுக்காக கான்வாஸ் செய்தார்.

முதலில் எல்லோரும் மறுத்தாலும் ஓரிருவர் அவர் குரலுக்கு செவிசாய்த்து சீட்டுப் பணத்தில் முதலீடு செய்ய.. மெல்ல மெல்ல கவிதா சிட்ஸும் வளர ஆரம்பித்தது.

ஆயிரக் கணக்கில் புரள ஆரம்பித்த பணம் லட்சக் கணக்கில் புரள ஆரம்பித்தது. ஏலச் சீட்டின் தொகையும் லட்சங்களாய் உயர்த்த தீர்மானிக்கப்பட்டு ஏலத் தொகையை எடுப்பதற்கு வியாபாரிகளிடையே நல்ல போட்டியும் ஏற்பட்டது.

ராமனாதனும் கவிதாவும் துள்ளிக் குதிக்காத குறையாய் வளர்ச்சியைக் கண்டு சந்தோஷப் பட்டனர். தான் நினைத்தது போல் கனவெல்லாம் நனவாகிவிடும் என்ற மகிழ்ச்சி அவர்களை திக்கு முக்காட வைத்தது.

ஆனால் அவர்களது சந்தோஷம் அதிக நாள் நீடிக்கவில்லை. ராமனாதனின் பார்ட்னர் உருவத்தில் பேரிடி ஒன்று அவர்களைத் தாக்கியது.

சீட்டுக் கம்பெனியில் ராமனாதனின் பங்குதாரரான நண்பர் பண ஆசையால் கம்பெனிக்குச் சொந்தமான லட்சக் கணக்கான சந்தாதாரர்களின் பணத்தைச் சுருட்டிக் கொண்டு இரவோடிரவாய் தலைமறைவாகி விட்டதுதான் அந்தப் பேரிடி.

விஷயம் கேள்விப்பட்டு துடித்துப் போய் விட்டனர் ராமனாதனும் கவிதாவும். ஒன்றல்ல இரண்டல்ல... பத்து லட்சம் ரூபாய் பணம். எல்லாம் அவர்களை நம்பி கம்பெனியில் முதலீடு செய்த வாடிக்கையாளர்களின் பணம். எப்படி கொடுக்கப் போகிறார்கள்? என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

ராமனாதன் தலையில் கைவைத்து விட்டு இடிந்து உட்கார்ந்து விட்டார். அந்த நண்பன் மோசக்காரனாகி பணத்தை இப்படிச் சுருட்டிக் கொண்டு ஓடுவானென்று அவர் கனவிலும் நினைக்கவில்லை!

கவிதாவிற்கோ அழுகையே வந்து விட்டது. கொஞ்சம் கொஞ்சமாக அவள் கட்டப் போன கோட்டை ஆரம்ப அஸ்திவாரத்திலே அடிபெயர்ந்து விட்டது ஒரு நம்பிக்கைத் துரோகம்? அந்த ஆள் இப்படி ஏமாற்றுவார் என கனவிலும் எதிர்பார்க்க வில்லையே?



# 4

ஆயிற்று. படபடவென்று வளர்ச்சி கண்ட 'கவிதா சிட்ஸ்' அடியோடு இழுத்து மூடப்பட்டது. ராமனாதன் சீட்டுக் கம்பெனியில் பணம் செலுத்தியவர்கள் தன்னை சும்மா விடமாட்டார்கள் என்பதை உணர்ந்து தனது நிலைமையை அறிந்து உடனடியாக ராஜாவிற்கு தந்தி கொடுத்து விட்டார்.

கவிதாவிடம் விஷயத்தைச் சொல்லி, ''இனி நம்மை காப்பாற்ற அவர் ஒருவரால்தான் முடியும். இல்லையேல் குடும்பத்தோடு பேப்பர் செய்தியாகி ஜெயிலில் கம்பி எண்ணுவதைத் தவிர வேற வழியே இல்லையம்மா...''



என்றபோது கவிதா பேந்தப் பேந்த விழிக்கத்தான் செய்தாள்.

எல்லாம் சரிதான். ஆனால் இனி எந்த முகத்தோடு ராஜாவின் முன் நிற்பது? இஷ்டமில்லை, பிடிக்கவில்லை என்று கூசாமல் பேசி விரட்டி விட்டு... திரும்பவும் எப்படி அவர் முகத்தில் விழிப்பது?

கேள்விகள் பூதாகரமாய் எழும்பி அவளை வாட்டி யெடுத்தாலும் தற்போதுள்ள அபாயமான சூழ்நிலையில் அப்பா சொல்வதைப் போல தங்களை காப்பாற்ற ராஜாவைத் தவிர வேறு யாராலும் முடியாது என்பதை உணர்ந்திருந் தாள்.

ஆனால் ராஜா உதவி செய்வானா என்ற பயமும் கூடவே எழுந்தது. அன்று அவனது வார்த்தையை மதிக்காது முகத்திலடித்தாற் போல் சொன்னதை வைத்துக் கொண்டு... எக்கேடும் கெட்டுப் போங்கள் நான் உதவிக்கு வர மாட்டேன்... என்று சொல்லிவிட்டால்..?

அந்த நினைப்பே அவளுக்கு பயத்தைக் கொடுத்தது அவளால் அப்படி அதிக நேரம் யோசிக்க முடியவில்லை.

தந்தி கிடைத்த அரைமணி நேரத்திலே ப்ளைட் பிடித்து ராஜா வந்து விட்டான். விறுவிறுவென உள்ளே நுழைந் தவன் தலைகவிழ்ந்து சோகம் பொங்க கிடந்தவர்களை அதிசயமாய்ப் பார்த்தான். கவிதாவிற்குத்தான் அவன் முகத்தை நிமிர்ந்து கூட பார்க்க முடியவில்லை. அந்த தைரியமும் அவளுக்கு இல்லை.

ராஜா ராமனாதனிடம்தான் சென்று ''என்ன நடந்தது சொல்லுங்கள்?'' என்றான் உணர்ச்சியற்றக் குரலில்.

ராமனாதன் எல்லாவற்றையும் விவரித்தார். சீட்டுப் பணம் பத்து லட்சத்துடன் பார்ட்னராய் இருந்தவர் இர வோடிரவாய் கம்பி நீட்டியது வரை சொல்லி முடித்தார்.

அவர் சொன்ன முழுவதையும் எந்தவித உணர்ச்சியு மில்லாமல் கேட்டுக் கொண்டிருந்த ராஜா நிமிர்ந்து நேராய் அவரைப் பார்த்தான்.

''சரி. போகட்டும். இப்போதாவது என் பேச்சை.. இல்லை... என் தாயார் அதாவது உங்கள் சகோதரி பேச்சைக் கேட் கிறீர்களா?''

ராஜா இப்படிக் கேட்டதும் ராமனாதன் துணுக்குற்று ''என்ன சொல்கிறீர்கள்?'' என்றார் குரல் நடுங்க.

எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன். சீட்டுப் பணம் முழுவதையும் நான் செட்டில் செய்து விடு கிறேன். அதற்காகவே செக் புக்கை கையோடு கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். குடும்பத்தோடு கிளம்பி எங்கள் வீட்டிற்கு வந்துவிட வேண்டியதுதான்... இதுதான் எனது தாயாருடைய விருப்பம். செய்கிறீர்களா?''

ராஜா இப்படிக் கேட்டதும் அவர்களது அன்பை நினைத்து கண்கலங்கி அப்படியே அவனது கைகளைப் பிடித்துக் கொண்டார் ராமனாதன். அவரால் உணர்ச்சி களை அடக்க முடியவில்லை. ஆபத்து என்றால் விலகி ஓடும் சொந்தங்களுக்கிடையே ஓடோடி வந்து உதவும் அவர்களது அன்பை நினைத்து தேம்ப ஆரம்பித்து விட்டார்.



ராஜாதான் அவரை சமாதானப்படுத்தினான். மளமள வெனக் காரியங்களை கவனிக்க ஆரம்பித்தான்.

கவிதாவின் பாடுதான் ரொம்பவும் சங்கடமாயிருந்தது. அவனை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. நன்றியென்று ஒரு வார்த்தை சொல்லக் கூட முடியவில்லை. எப்படிச் சொல்வாள்? எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவனைப் பார்ப்பாள்?

ஆனால் தலைகவிழ்ந்து நடமாடிக் கொண்டிருந்த வளை ராஜாவே தேடி வந்தான். கைகளை கட்டியவாறு எதிரே வந்து அவளை உறுத்துப் பார்த்தவன். ''நீ ஒன்றும் பயப்படத் தேவையில்லை. இஷ்டமில்லாதவனை கட்டிக் கொள்ள நான் ஒரு போதும் வற்புறுத்த மாட்டேன். புரிகிறதா?''

கவிதா அவன் வார்த்தைகளைக் கேட்டு தடுமாறிப் போனவள் அவசரமாய் ஏதோ சொல்ல வாயெடுக்க... டக்கென கைகளை உயர்த்தியவன். ''ஒன்றும் சொல்லத் தேவையில்லை....'' என்றபடி விறுவிறுவென அகன்று விட்டான்.



# 5

ஒருவழியாய் எல்லாம் முடிந்து விட்டது. கவிதா சிட்ஸிற்கு மூடு விழா நடத்தப்பட்டு ராஜா சீட்டுக் காரர்களின் பணத்தை முழுவதும் செட்டில் செய்தான்.

ராமனாதன் குடும்பத்தோடு, மூட்டை முடிச்சுகளோடு அடைக்கலம் தேடும் அகதி போல் தன் சகோதரி பூரணி அம்மாள் குடும்பத்தோடு ஐக்கியமாகி விட்டார். ராஜாவும் சரி, பூரணி அம்மாளும் சரி ஒரு வார்த்தை அவரிடம் தவறாகப் பேசவில்லை. இப்படி பணம் முழுவதையும் ஏமாந்து விட்டீர்களே... எனக் கடித்து கொள்ளவும் இல்லை.

ராமனாதன் தான் மனம் ஆறாதவராய், ''முதலிலேயே உங்கள் பேச்சை கேட்டிருக்க வேண்டும். கேட்காமல் தொழில் செய்யப் போகிறேன்... என்று சம்பாதித்த பணம் முழுவதும் கோட்டை விட்டு விட்டேனே...? அது மட்டுமா? உங்களுக்கும் என்னால் தண்டம்! பத்து லட்ச ரூபாய் செலவு!''

''இந்தக் காலத்தில் என்னதான் சொந்தம் என்றாலும் யார் இப்படி உதவுவார்? நீங்கள் எனக்கு சொந்தம் மட்டு மில்லை. வாழ்வளித்த தெய்வம் மாதிரி...!'' என அடிக்கடி உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவார்.

ராஜாவும் சரி பூரணி அம்மாளும் சரி... அப்படி ராமனாதன் உணர்ச்சி வசப்படும் சமயங்களில், ''அட.... இன்னும் அதையே நினைத்துக் கொண்டு இருக்கிறீர் களா? பழசை விடுங்கள்!'' என்று ஆறுதல் படுத்தி விடுவர்.

கவிதாவிற்கோ இப்போதுதான் உலகமே புரிவது போல் இருந்தது. அவளும் தந்தையும் பிஸினெஸ் என்ற பெயரில் எவ்வளவு ஈஸியாய் பணத்தை இழந்து விட் டோம்? என மலைத்தாள்.



தந்தை சரியான வெகுளி. யார் பேச்சிலும் மயங்கி விடுவார். அவர் மட்டும் அந்த பார்ட்னரின் நிறத்தை உண்மையான அவரது வஞ்சகக் குணத்தை அறிந்திருந் தால் இப்படி ஏமாந்திருப்பாரா?

எல்லாம் நேரம்தான். யார் கூப்பிட்டபோது வீராப்பாய் தொழில் தொடங்கப் போகிறோம். சொந்தக் காலில் நிற்கப் போகிறோம்.... என்று தலைநிமிரச் சொன்னோமோ... இன்று அவர்களிடமே... தலைகுனிய அடைக்கலம் தேடு மளவுக்கு நிலைமை போய் விட்டது.

ஆனாலும் ஒன்று அவளை ரொம்பவும் அதிசயிக்க வைத்தது. ராஜாவும் சரி பூரணி அம்மாளும் சரி அவர்கள் மீது அன்பை வாரியிறைத்து மிகவும் மரியாதையுடன் நடத்தியது அவளை நெகிழச் செய்தது.

வீட்டிற்கு வந்த நாளே பூரணி அம்மாள் அவளை கட்டிக் கொண்டு ''நல்லவேளை இப்பவாவது என் பேச்சைக் கேட்டு வந்தீர்களே? அது போதும். ஆண்டவன் என்னைக் கொடுமையிலிருந்து காப்பாற்றி விட்டான்...!'' என்று அரற்றிய போது கவிதா அதிர்ந்துதான் விட்டாள்.

''என்னம்மா சொல்கிறீர்கள் கொடுமையா?''

கவிதா கேட்டதற்கு பெருமூச்சு விட்டாள் பூரணி அம் மாள். ''ஆமாம்மா பெரும் கொடுமைதான். நரகம்தான்! இவ்வளவு பெரும் வீட்டில் தன்னந்தனியாக 'தனிமை' சித்திரவதையை எவ்வளவு வருடங்களாக அனுபவித்து வருகிறேன். தெரியுமா? அவன் ராஜாவாவது தினம் ஆபீஸ் போய் விடுவான். நான் என்ன செய்வேன்? சேரை எடுத்துப் போட்டுக் கொண்டு வெறும் மரத்தையும்

சுவரையும் எவ்வளவு மணி நேரம் பார்க்க முடியும்? அப்போது தான் நினைத்துக் கொள்வேன். என்ன பணமிருந்து என்ன பயன்? சுற்றத்தாருடைய அணைப்பு இல்லாவிட்டால் வாழ்க்கை கசப்புதான்... என்பதை உணர்ந்து எப்படியெல்லாம் துடித்திருக்கிறேன் தெரியுமா?

ம்ஹூம்... நல்லவேளை இப்போதாவது வந்து என்னை நரகத்திலிருந்து மீட்டீர்களே... அதற்கு நான்தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்!'' பூரணி அம்மாள் நெகிழ்ந்து போய் சொல்ல அவர்களின் உண்மையான தவிப்பை பாசத்தைக் கண்டு கவிதாவும் குளிர்ந்துதான் போனாள்.

ராஜாவும் தனது நடவடிக்கைகளால் அவளைத் திகைப்படையவேச் செய்தான். மாளிகை போன்ற தனது பெரிய வீட்டில் ஆள் ஆளுக்கு தனி ரூம் ஒன்று என்று ஒதுக்கி கொடுத்தான். கவிதாவின் தம்பிகளுக்கும் தங்கைகளுக்கும் அவனே ஆட்கள் மூலம் பள்ளியிலிருந்து டிரான்ஸ்பர் சர்டிபிகேட் வாங்கி திருச்சியில் பெரிய பள்ளிகளிலும் அட்மிஷன் கிடைக்க முயன்று கொண்டிருந்தான்.

ஆனால் கவிதாதான் திட்டவட்டமாக தான் படிப்பைத் தொடரப் போவதில்லை என்று கூறி விட்டாள். தானும் தன் குடும்பமும் ஒருவருக்கு பாரமாகிப் போய் விட்ட சூழ்நிலையில் இனியும் படிப்பைத் தொடர்வது அவளுக்கு ஒவ்வாத விஷயமாகப் போயிற்று. எம்.ஏ.படிப்பு. கடைசி செமஸ்டர்தான். விண்ணப்பித்து கரஸ்பாண்டிங்கில் எழுதினால் போயிற்று என்று படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டாள் கவிதா.



கூடவே அவள் மனதில் வேறு ஒரு திட்டமும் இருந்தது. வீட்டில் சும்மா இருக்காமல் உடனடியாக ஒரு வேலை தேடிக் கொண்டு ஓரளவாவது சம்பாதித்துக் கொடுக்க வேண்டும். தன் குடும்பம் வெறும் தண்டச் சோறு என்ற பெயருக்கு ஆளாகி விடக் கூடாது. அவளை அந்த எண்ணத்திலே, அந்த பயத்திலே படிப்பையும் நிறுத்தியிருந்தாள் கவிதா.

ஆயிற்று. எல்லாம் அவள் நினைத்தபடியே நடந்து கொண்டிருந்தது. ராஜாவைப் பார்க்கும் போது ஓரிரு சமயங்களில் நேருக்கு நேராய் முட்டிக் கொள்ளப் போவது போன்ற சமயங்களில் கூட அவள் ரொம்பவும் சங்கடப்பட ராஜாவோ எதுவும் நடவாதது போல் விறுவிறுவென குனிந்தபடி அகன்று விடுவான்.

கவிதா அது போன்ற சமயங்களில் தவித்துதான் போவாள். முன்பு நாம் சொன்ன 'இஷ்டமில்லை' வார்த்தை தானே அவனை இந்த பாடு படுத்தி விட்டது?

மெய்யாகவே அவள் அதைச் சொல்லவில்லையே? தனது சூழ்நிலைக்காகத்தானே அப்படிச் சொன்னாள். அதையெல்லாம் ராஜா புரிந்து கொண்டிருந்தானா? இல்லை இனி சொன்னால்தான் அவன் புரிந்து கொள்வானா?

ரொம்ப நேரம் அப்படியே நினைத்து கவலைப் பட்டுக் கொண்டிருந்தவள் அப்படியே தூங்கியும் போனாள்.



# 6

மறுநாள் அவள் பயந்தது போல்தான் நடந்தது.

தனியாக ரூமில் இருந்த அவளைத் தேடி வந்தான் ராஜா.

ரூமின் முகப்பு நிலையில் சாய்ந்து கொண்டான், கைகளைக் கட்டியவாறு அவளையே விழுங்குவது போல் பார்த்தான்.

கவிதா இதைக் கொஞ்சமும் எதிர்பாராதவள் ஹெட் மாஸ்டர் முன் நிற்கும் பள்ளிச் சிறுமி போல் அடங்கி ஒடுங்கி எழுந்து நின்றாள்.

ராஜாவுக்கு அது வசதியாய்ப் போயிற்று. நிதானமாய் அவளது ஒவ்வொரு அங்கமாய் மேலிருந்து கீழ் வரை பார்வையால் ஊடுருவ ஆரம்பித்தான்.

கவிதாவிற்கு உடம்பு கூசியது. என்னதான் மனதிற்குப் பிடித்தவன் ஆனாலும் இப்படியா ஊடுருவி விழுங்குவது போல் பார்ப்பது?

வெட்கம் படரக் குங்குமமாய்ச் சிவந்த முகத்தை மெல்ல நிமிர்த்தினாள்.

''நீ மாறவே இல்லை. அப்படியே அழகுப் பதுமை யாகத்தான் இன்னமும் இருக்கிறாய்...''



ராஜா முணுமுணுத்தபடி சட்டென அவளைப் பிடித் தான். அவனது வலுவான கரங்கள் அவளது இடையை வளைத்து இறுக்கியது. கவிதா செய்வதறியாமல் திகைத் தாள்.

''என்ன ஒரு அழகு நீ'' என்றபடி சட்டென அவளைத் திருப்பி அப்படியே மூச்சு முட்டுவது போல் மார்போடு அணைத்தான். வெறியோடு அவளைத் தழுவினான்.

கவிதா விடுபடவும் முடியாமல் விடுபடவும் தோன் றாமல் பூங்கொடியாய் அவனது கரங்களில் துவண்டு கொண்டிருந்தாள். வேகமாய் அவளை அணைத்துக் கொண்டிருந்தவன் அதே வேகத்தில் விடுவித்து அவளது முகத்தை நிமிர்த்தினான்.

''இந்த உடம்பை வைத்துக் கொண்டுதானே என்னைப் பிடிக்கவில்லை என்று சொன்னாய்?''

''......................''

''இந்த உடம்புதானே வேறு எவனையோ காதலித்துக் கொண்டிருப்பதாய் சொன்னது... சொல்?''

''அது... அது....'' கவிதா கஷாயத்தைக் குடித்தது போல் திக்கித் திணறினாள்.

''பதில் சொல்... உன்னிடம்தான் கேட்கிறேன்....!'' மறுபடியும் குலுக்குவதை போல் அவளை உடம்போடு உலுக்கினான். கண்களை உருட்டி கோபமாய்ப் பார்த்தான்.

மிரண்டு போனவளாய் கவிதா அவனைப் பார்த்தாள்.

''சொன்னேன். ஆனால்... அது... அது... பொய் பொய் தான்...!''

''பொய்யா?''

''ஆமாம். மேலே படிக்க ஆசை... படிப்பை நிறுத்துவது எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் உங்களிடம் அப்படி பொய்களைச் சொன்னேன். ஆனால் உண்மையில்...''

''ஒஹோ...!'' என்றபடி அவளை மேலே பேசவிடாமல், அலட்சியமாய் ஏறிட்டவன். ''அப்படியானால் என்னைப் பிடிக்கவில்லை என்று சொன்னதும் பொய்...வேறு ஒருவனை காதலித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னதும் பொய் அப்படித்தானே?'' கர்ஜனைக் குரலில் கேட்டான்.

கவிதா பலஹீனமாய் தலையசைத்தாள்.

''தவறுதான்! என்னை மன்னித்து விடுங்கள்...!''

''மன்னிப்பு இருக்கட்டும்...'' என்றபடி அவள் தோள்களை இறுகப் பற்றியவன் நேருக்கு நேராய் அவளது கண்களை ஊடுருவினான்.

''இப்போது நான் கேட்பதற்கு பதில் சொல். என்னைப் பிடித்திருக்கிறதா?''

கவிதா மென்று விழுங்கினாள். அவன் குரலில் தொனித்த விஷமம் அவளுக்கு பயத்தைக் கொடுத்தது.

''பிடித்திருக்கிறது...'' என்றாள் மெல்லிய குரலில்.

''அதானே பார்த்தேன்... பிடிக்கவில்லை என்றுதான் சொல்ல முடியாதே? வேறு நாதியற்றுப் போய் எங்களை நாடி வந்திருக்கிறாய்? பழைய குருடி போல் ஏதேதோ கதை விடுகிறாய். அதையெல்லாம் நான் நம்பப் போவ



தில்லை. இருந்தும்...'' என்றபடி ராஜா நிறுத்தியவன் குரூரமாய் அவளைப் பார்த்தவாறு. ''எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறது. அதனால் உன்னை வைத்துக் கொள்ளப் போகிறேன். மனைவியாய் அல்ல... ஆசை நாயகியாய்'' சொல்லியபடி மறுபடியும் மூச்சு முட்டுவது போல் அவளை இறுக அணைத்தான்.



# 7

''விடுங்கள்... விடுங்கள்...'' என்றாள் கவிதா மெல்லிய அலறலுடன் திடுக்கிட்டவளாய்.

ஆனால் ராஜா அவளை விடுவதாயில்லை. அவளது இடையை தன்னோக்கி வளைத்தவன் அவளை மேலும் இறுக அணைத்தான்.

மூச்சு முட்டுவது போன்ற இறுக்கமான அணைப்பில் துவண்டவளாய் திமிறிக் கொண்டு அவனது பிடியில் இருந்து விடுபட முயற்சித்தாள். இரும்புப் பிடியாய் இருந்தது அவனது அணைப்பு.

''உன்னால் முடியாது!'' மெல்ல முணுமுணுத்தவனாய் ராஜா குனிந்து அவள் கழுத்துப் பக்கம் முகம் பதித்தான். சில்லென முத்தமிட்டான்.

''விடுங்கள்! இது... தப்பு... நீங்கள் செய்வது தவறு...!'' அலறினாள்.

அவள் குரலில் மெல்ல தலையை உயர்த்தியவன், ''தப்புதான். தவறுதான். முத்தம் உதட்டில் அல்லவா கொடுக்க வேண்டும் கழுத்தில் போய் கொடுக்கிறேனே?'' என்றபடி தன் உதட்டால் துடித்த அவளது செவ்விதழ் களைத் தேடி அழுந்த முத்தமிட்டான்.

தீப்பட்டது போல் சினமாய் வெகுண்டு பார்த்தவளை அலட்சியமாய்ப் பார்த்தான்.

''ரொம்பவும் துள்ளாதே. எனக்கு உரிமை இருக்கிறது!'' என்றபடி மறுபடியும் இறுக்கிப் பிடித்தான்.

''உரிமை இருக்கிறதா?''

''ஆமாம் உரிமை இருக்கிறது. உன்னை நான் அணைக் கலாம். முத்தமிடலாம். இன்னும் என்ன வேண்டு மானாலும் செய்யலாம்...''

''என்ன... என்ன சொல்கிறீர்கள்?''

''ம்ம்... கிளிப்பிள்ளை... உனக்கு எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமா? சரி... வா... விவர மாகச் சொல்கிறேன்...'' என்றபடி அணைப்பை விடாமல் அப்படியே அவளை படுக்கைப் பக்கம் கொண்டு போனான். அப்படியே மெத்தையில் விழுந்தான். அணைப்பை விடாமல் மூச்சு முட்ட அவளைப் பிடித்தவன் அவமானத் தில் சிறுத்த அவளது முகத்தை நிமிர்த்தினான்.

''இப்போது புரிகிறதா? எத்தனை சினிமாப் படங்களில் பார்த்திருப்பாய்? இதைக் கூட நான் செய்யலாம். செய் யட்டுமா?''



கட்டிய கணவன் போல் படுக்கையில் தள்ளி தன் மேல் படர்ந்து அவன் செய்கையைக் கண்டு கவிதா ஒருகணம் துடித்துப் போனாள். கண்களில் நீர் தளும்பி விட்டது. தன் பலம் முழுவதையும் திரட்டி அவனை தள்ளி விடப் போனாள்.

ஆனால் ராஜா இறுக்கமாய் அவள் மேல் படர்ந்தவன் சட்டென அவள் கண்களில் நீர் துளிர்த்ததை கண்டு விட்டானோ என்னவோ... இறுக்கமான தனது பிடியைத் தளர்த்தினான். சட்டென அவளை விடுவித்தும் விட்டான்.

அவசரமாய் எழுந்து உடைகளைச் சரி செய்து கொண்டு அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

ஆனால் ராஜா அதை கொஞ்சமும் சட்டை செய்யாமல் சிரித்தான். ''முறைக்கத்தானே செய்கிறாய்? நன்றாக முறைத்துக் கொள். என்னுடைய முறைப்பெண்தானே நீ!''

''வந்த விருந்தாளியிடம் இப்படியா நடந்து கொள்வது. கொஞ்சம் கூட நாகரீகம் இல்லாமல்...'' கவிதா முடிக்க வில்லை.

''விருந்தாளியா? நீயா?'' திரும்பவும் கடகடவென ராஜா சிரித்தான்.

''பின் நான் யாராம்?''

''நீ... வேறு... என்னை கட்டிக் கொள்ள வந்தவள். நானே கதியென சரணாகதி அடைந்து விட்டவள். என்னைத் தவிர உன் குடும்பத்திற்கு வேறு யாராலும் உதவ முடி யாது அதாவது உன் மூளைக்கு புரிகிறதா?''

''புரிகிறது.''

''பின் புரிந்துமா என்னைத் தடுக்கிறாய்? வா... இப்படி'' (என்றபடி திரும்பவும் அவளை இழுத்தான். இழுத்து அணைக்கப் போனான்.)

''விடுங்கள். இதற்கு ஒரு முடிவு கட்டுகிறேன்!'' என்றபடி பலவந்தமாய் அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டாள். பற்களைக் கடித்து ஆவேசமாய் சிந்தித்த வளை அதிசயமாய்ப் பார்த்தான்.

''முடிவு கட்டப் போகிறாயா? எப்படி?''

குத்தலாய்ப் பார்த்தவனை முறைத்தவாறு அங்கிருந்து விறுவிறுவென நடந்தாள்.

நல்ல வீராப்புதான்...! கிண்டலாய் ராஜா முணுமுணுப் பது கேட்டது.

கவிதாவிற்கு தெரியவில்லை. எப்படி சமாளிக்கப் போகிறாள்? எப்படி முடிவு கட்டப் போகிறாள்?

ஆனால்... எவ்வளவு பெரிய அவமானம்?

என்னவெல்லாம் பேசிவிட்டான்?

என்னை விட்டால் உங்களுக்கு வேறு கதி கிடையாது. என் காலடியே இனி உனக்கு மடி.

அதனால்... அவன் அணைப்பானாம்... முத்தமிடு வானாம்... இன்னும் என்னவெல்லாம் செய்வானாம்...

எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ள வேண்டுமாம்!

என்ன ஒரு திமிர். இவன் கிள்ளி விளையாட நான் என்ன கை பொம்மையா? இல்லை. என் உணர்ச்சிகளுடன் விளையாடுவதுதான் இவனது பொழுதுபோக்கா?



கோபமாய் நேராய் தந்தையைத் தேடிப் போனாள் கவிதா.

தந்தை ராமனாதன் வீட்டின் பின்புற வெட்ட வெளி யில் ஈஸி சேரில் அமர்ந்தவாறு சுற்றிலும் வட்டமிட்ட கோழிகளுக்கு உணவை விசிறிக் கொண்டிருந்தார்.

மூச்சிரைக்க வந்த அன்பு மகளைப் பார்த்ததும் பதறிப் போனவராய் ஒரு கணம் எழுந்து விட்டார். என்னம்மா விஷயம்? என்று அவர் கேட்பதற்கு முன்பே கவிதா வெடித்தாள்.

''அப்பா என்னதான் நடந்தது. எங்களை கூண்டோடு விற்று விட்டீர்களா? சொல்லுங்கள்'' என்றாள் வந்த ஆவேசம் கொஞ்சமும் குறையாதவளாய்.

ராமனாதன் துணுக்குற்றவராய் அவளைப் பார்த்தார்.

''பதட்டம் வேண்டாம். என்னம்மா நடந்தது?''

''அது... அது...'' கோபம் பொங்கியவளாய் சொல்ல ஆரம்பித்தவள் மறுகணமே திடுக்கிட்டாள். எதைச் சொல்வது? ராஜா அணைத்ததையா? அணைத்து முத்த மிட்டு கேலி பேசி அவளை உரிமை கொண்டாடியதையா? எதைச் சொல்ல? எப்படிச் சொல்ல?

ஒரு தந்தையிடம் மகள் சொல்லுகிற விஷயங்களா அவை?

தணித்து அடங்காதவளாய் விஷயத்தை சொல்லவும் முடியாதவளாய் அவள் தவிப்பதை ராமனாதன் புரிந்து கொண்டார் போலும்.

நெருங்கியவர் வாஞ்சையாய் அவள் தலைக் கேசத்தை வருடிக் கொண்டே கனிவாய் அவளைப் பார்த்தார்.

''எனக்கு எல்லாம் புரிகிறதம்மா! உன்னால் சில விஷயங்களை ஜீரணிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். ஆனாலும்... ஆனாலும்... எனக்காக இந்த வயதானவனுக்காக எல்லாவற்றையும் கொஞ்சம் பொறுத்துக் கொள்ள முடியாதா? சொல் கண்மணி.''

கொஞ்சும் குரலில் தந்தை கேட்க மறுகணமே நீருற்றாய் உருகிப் போனாள் கவிதா.



# 8

கவிதா தந்தையின் பேச்சில் உருகித்தான் போனாள்.

அவளுக்கு எப்போதும் தந்தை மேல் பாசம் அதிகம். தாய் இல்லாத தங்களை கொஞ்சமும் குறை தெரியாமல் வளர்க்க அவர் பட்ட கஷ்டங்கள் அடிக்கடி அவள் நினைவுக்கு வரும். அதிர்ந்து பேசத் தெரியாதவர். யாரையும் அதட்டக் கூட மாட்டார்.

அந்த அன்புத் தந்தை பெற்ற மகளிடம் எனக்காகப் பொறுத்துக் கொள்ளக் கூடாதா? என்று வாய் விட்டுக் கேட்கிறார்.



என்ன செய்ய முடியும்?

கவிதா பொறுத்துக் கொண்டாள்.

கவிதா பொறுமை காப்பது தெரிந்ததோ என்னவோ அடுத்த இரண்டு நாட்கள் ராஜா அவளிடம் எந்த வம்பிற்கும் வரவில்லை. அவன் பாட்டிற்கு தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

கவிதாவும் கூடுமானவரை அவன் பார்வையில் விழுவதை தவிர்த்த அவன் அலுவலகம் சென்று விட்டது உறுதியாய்த் தெரிந்த பின்பே ரூமை விட்டு வெளியே வந்தாள்.

காலையிலே தம்பி தங்கைகள் நால்வரும் ரெடியாகி உற்சாகமாய் பள்ளிக்கு செல்ல தயாராய் இருப்பதைக் கண்டு சந்தோஷமாய் அதிர்ந்துதான் போனாள். அதற்குள் பள்ளியில் இடம் கிடைத்து விட்டதா? அவ்வளவு விரைவில் அட்மிஷன் போட்டு விட்டார்களா?

தன்னை நோக்கி ஓடி வந்த கடைக்குட்டி தம்பியை அப்படியே வாரியெடுத்து அணைத்துக் கொண்டாள். முத்தமிட்டாள்.

தங்கை வத்சலா ஆவலாய் பக்கத்தில் வந்தாள்.

''அக்கா விஷயம் தெரியுமா? எல்லாம் அத்தானின் ஏற்பாடு. ஒரே நாளில் ஒரே பள்ளியில் எல்லோருக்கும் அட்மிஷன் வாங்கித் தந்துவிட்டார்கள். அவ்வளவு செல்வாக்கு அவர்களுக்கு!''

சொல்லிவிட்டு ஆச்சரியமாய் வாய் பிளந்தாள் வத்சலா.

கவிதாவும் ராஜாவின் செல்வாக்கைக் கண்டு ஆச்சரியப் பட்டுத்தான் போனாள். கூடவே, தன் தம்பி

தங்கைகளின் படிப்பில் அவன் காட்டும் ஆர்வம். அதீத சுறுசுறுப்பு அவளை மலைக்க வைத்தது.

எப்படியோ... இவர்கள் மீதாவது அன்பையும் பாசத்தையும் சிதறாமல் வைத்துக் கொண்டானே... என்று திருப்தியும் பட்டுக் கொண்டாள்.

பின்... அவசரமாய் யோசித்தவள் ஞாபகம் வந்தவளாய் விறுவிறுவென சமையலறைக்குள் நுழைந்தாள். ஸ்கூலிற்கு அனுப்பினால் போதுமா? மதிய உணவிற்கு டிபன் காரியரில் உணவை கொடுத்தாக வேண்டுமே?

அதற்கும்... அவளுக்கு வேலை இல்லாமலிருந்தது. ராஜாவின் தாயார் பூரணி அம்மாளே எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.

''எதற்கம்மா உங்களுக்கு வீண் சிரமம்?'' என்று சிணுங்கியவளை ''எனக்கா சிரமம்?...'' என செல்லமாய் அதட்டி புன்னகைத்தார்.

பூரணி அம்மாள் அத்துடன் விடவில்லை.

''கவிதா முக்கியமாய் ஒன்றைச் சொல்லியாக வேண்டும்...'' என்றபடி அவளை நோக்கி,

கவிதா திகைத்தபடி ''என்னம்மா விஷயம்?'' என்று பதற,

பூரணி அம்மாள் புன்னகை ததும்ப, ''வீட்டில் எல்லாவற்றுக்கும் வேலையாட்கள் இருக்கிறார்கள். எல்லா வேலைகளையும் அவர்களே கவனித்துக் கொள்வார்கள். நீ ஒன்றும் செய்யக்கூடாது. புரிகிறா?'' என்றபடி அவள் கைகளைப் பற்றியவள் அத்துடன் விடாமல், ''பார் என்னமாய் மெலிந்து விட்டாய்? நன்றாகச் சாப்பிட்டு நன்றாக ஓய்வெடுக்க வேண்டும்!'' என்று அறிவுரையும் சொன்னாள்.



கவிதா புன்முறுவல் பூக்கத் தலையாட்டிக் கொண்டாள். அவளுக்கு ஒரு வகையில் பூரணி அம்மாள் இப்படிச் சொன்னது வசதியாக இருந்தது.

அவள் மனதில் ஒரு திட்டம் வேறு வைத்திருந்தாள்.

தம்பி தங்கைகள் பள்ளிக்கு சென்றாயிற்று. அப்பா தோட்டம் வாக்கிங் என நேரத்தை போக்கி விடுவார். கவிதா என்ன செய்ய முடியும்?

வீட்டில் சும்மா உட்கார்ந்திருப்பதா? அல்லது அவளையே குறிபார்த்து கேள்விகளால் குதறிக் கொண்டிருக்கும் ராஜாவின் போக்கை சகித்துக் கொண்டிருப்பதா?

அதனால் கவிதா மனதுள் ஒரு முடிவெடுத்திருந்தாள். வீட்டில் சும்மா தேமே என்று உட்கார்ந்திருக்காமல் எங்காவது வேலைக்குச் சென்றாக வேண்டும். அது எந்த வேலையானாலும் சரி. எப்படிப்பட்டதானாலும் சரி. காலை எட்டு மணியில் இருந்து மாலை ஆறு மணி வரை எங்காவது ராஜாவின் தொந்தரவில்லாமல் நிம்மதியாய் இருக்கவேண்டும்.

அப்பாவிடம் இதைச் சொல்லிய போது அவர் திகைப்போடு பார்த்தார்.

''கண்டிப்பாக நான் போக வேண்டும். என்னைத் தடுக்காதீர்கள் அப்பா...''

ராமனாதனால் பேச முடியவில்லை. கவிதாவின் குரலில் இருந்த உறுதி அவரைத் தடுமாறச் செய்தது.

மேலும் கவிதாவின் இயல்பைப் பற்றி அவருக்குத் தெரியும். அவள் மீது யாரும் பரிதாபப்படுவதோ இரக்கம் காட்டுவதோ சுத்தமாய் பிடிக்காத விஷயம். யாருக்கும் பாரமில்லாமல் தன் காலிலே நிற்கவே பிரியப்படுபவள் கவிதா.

அதனால் அவராலும் கவிதாவின் பேச்சைத் தட்ட முடியவில்லை. வழியில்லாதவராய் சம்மதித்தார்.

இருந்தாலும் ஆர்வம் கொண்டவராய். ''என்ன வேலை அம்மா? நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்றார்.

''எனக்கே தெரியவில்லை....'' என்று கவிதா அவசரமாய் கூற வந்தவள் உதட்டைக் கடித்துக் கொண்டு. ''தோழி ஒருத்தியிடம் சொல்லி வைத்திருந்தேன். அவள்தான் ஏற்பாடு செய்வதாய் கூறியிருந்தாள். அனேகமாக அலுவலக அக்கவுண்டிங் வேலையாகத்தான் இருக்கும்!'' என்று சமாளிக்கவும் செய்தாள்.

அதற்குப் பின் ராமனாதன் அவளிடம் ஒன்றும் கேட்கவில்லை. கவிதா விறுவிறுவெனத் தயாராகி கிளம்பியும் விட்டாள். கிளம்பும் போது ராஜா ரூமைப் பார்த்து அது பூட்டியிருப்பது கண்டு திருப்தி பட்டுக் கொண்டாள்.

'காலையிலேயே மகாராஜா அதிகாரம் செய்ய கோட்டைக்கு கிளம்பிச் சென்றாயிற்று...?' அது நல்லதுதான் பூரணி அம்மாள் எதிர் கொண்டாள்.

கவிதாவுக்கு பூரணி அம்மாவிடம் உண்மையைச் சொல்ல மனமில்லை. உண்மையைச் சொன்னால் பூரணி அம்மாள் எதிர் கொண்டாள்.



கவிதாவுக்கு பூரணி அம்மாவிடம் உண்மையைச் சொல்ல மனமில்லை. உண்மையைச் சொன்னால் பூரணி அம்மாள் ஒரு போதும் விடமாட்டாள். கவிதா வேலை பார்க்க சம்மதிக்க மாட்டாள் என்று அவளுக்கு நன்கு தெரியும்.

அதனாலே பூரணி அம்மாளின் கண்களை சந்திக்காமலே, ''தோழியை பார்த்து விட்டு வருகிறேன் அம்மா!'' என்றபடி கிளம்பினாள்.

எங்காவது வேலை கிடைத்ததும் அம்மாளிடம் சொல்லி எப்படியாவது சம்மதிக்க வைத்து விடலாம் எனவும் எண்ணிக் கொண்டாள்.

கவிதா வெளிவந்த போது ஞாபகமாய் தன் கல்லூரி சர்டிபிகேட்டுகள் அடங்கிய பையை தூக்கி வந்திருந்தாள். யோசித்தாள்.

இனி... எங்காவது வேலை தேட வேண்டியதுதான்!

எங்கு?

யோசித்தவளுக்கு நிஜமாகவே மீனா என்ற கல்லூரித் தொழில் இருப்பதும் அவள் சென்னையில் பெரிய ஏற்றுமதி நிறுவனம் ஒன்றில் வேலை பார்ப்பதாய் சொன்னதும் ஞாபகத்தில் உறைத்தது.

ஏற்றுமதி நிறுவனம் சரிதான்...! எந்த நிறுவனம்? அதன் பெயர் என்ன? அது எங்கே இருக்கிறது? சென்னை மாநகரில் மீனாவை அவள் வேலை பார்க்கும் நிறுவனத்தை கண்டு பிடிப்பது அவ்வளவு எளிதா?

மேலும் யோசித்தாள். மூளையைக் கசக்கிப் பார்த்தாள்.

மீனா புதிராய் சொன்னது ஞாபகத்தில் சட்டெனத் துளிர்விட்டது.

''கவிதா, நான் சென்னையில் வேலை பார்ப்பது உன் கம்பெனியில்தான்!''

''என் கம்பெனியா? என்ன உளறுகிறாய்?''

''உளறவில்லை! என் நிறுவனத்தின் பெயர் என்ன தெரியுமா? கவிதா எக்ஸ்போர்ட்ஸ்! தினம் தினம் வேலைக்கு நுழையும்போது... முகப்பு போர்டை பார்க்கும் போது எனக்கு உன் ஞாபகம்தான் வரும்...''

மீனா சொல்லிவிட்டுச் சிரிக்க, கவிதாவும் அப்படியா? என்று வியந்தவாறு சிரித்தாள். அத்தோடு விஷயத்தை மறந்தும் விட்டாள்.

இப்போது ஞாபகத்திற்கு வந்து விட்டது. மீனா வேலை பார்ப்பது 'கவிதா எக்ஸ்போர்ட்ஸ்' என்ற நிறுவனத்தில். ஆக... பெயரை கண்டுபிடித்தாயிற்று. அதன் விலாசம்?

அது ஒன்றும் பெரிய விஷயமாய் கவிதாவுக்குத் தெரியவில்லை. நேராய் பக்கத்தில் தெரிந்த டெலிபோன் பூத் ஒன்றிற்குச் சென்று டெலிபோன் டைரக்டரியை வாங்கினாள். பக்கங்களைப் புரட்சி 'கவிதா எக்ஸ்போர்ட்ஸின்' விலாசத்தை தேடி கண்டும் பிடித்தாள்.

டைரக்டரி கொடுத்த பூத் பெண்ணிற்கு நன்றி சொல்லி விட்டு கடற்கரைச் சாலையில் இருக்கும் கவிதா எக்ஸ்போர்ட்ஸ் நோக்கி கிளம்பினாள் கவிதா.

பஸ்ஸில் ஏறி அட்ரஸ் கண்டு பிடித்து அலுவலகத்திற்குள் நுழைந்தபோது தோழி மீனா அவளைப் பார்த்து மலைத்துதான் போனாள்.



நிறைய பரஸ்பர விசாரிப்புகளுக்குப் பின் கவிதா விஷயத்திற்கு வந்தாள். ''என்ன... உனக்கு இங்கு வேலை வேண்டுமா?'' மீனா திரும்பவும் வாய் பிளந்தாள்.

உதட்டைச் சுழித்தவாறு மீனா யோசிக்க ஆரம்பித்தாள். கவிதா அவள் முகத்தையே ஆவலாய் பார்த்தாள்.

மீனா சட்டென முகம் நிமிர்ந்தவள். ''கவிதா, எங்கள் முதலாளி ரொம்பவும் நல்லவர். ஆனால் அவர் இப்போது ஊரில் இல்லை. வெளிநாடு சென்றிருக்கிறார். எல்லா பொறுப்பும் அலுவலக மேனேஜர் கையில்தான். எதற்கும் உனக்காக அவரிடம் பேசிப் பார்க்கிறேன்....'' என்றபடி மீனா எழுந்தாள்.

சில மணி நேரங்கள் கழிந்திருக்கும்.

மீனா மேனேஜரிடம் பேசி கவிதாவின் திறமையை விளக்கி 'கவிதா எக்ஸ்போர்ட்ஸில்' கவிதாவுக்கு வேலையும் வாங்கிக் கொடுத்து விட்டாள்.

அவள் எதிர்பார்த்தது போல அக்கவுண்டிங் செக்ஷனிலே அவளுக்கு வேலை! குஷியுடன் அன்றே வேலையைத் தொடங்கி விட்டாள் கவிதா.

அன்று மாலை மீனாவுடன் தான் காலையில் நினைத்ததை சாதித்து விட்ட பூரிப்போடு மீனாவுக்கு மீண்டும் மீண்டும் தன் நன்றியை தெரிவித்தவாறு அலுவலகத்தை விட்டு வெளியே வந்து கவிதா நடந்தாள். அவள் அப்படி வேலை முடிந்து வெளிவருவதை தற்செயலாய் அங்கு காரில் வந்த ராஜாவின் கண்கள் கவனித்து விட்டன.



# 9

ராஜா அவளை கவனித்தது மட்டுமல்ல. அவள் அலுவலக கட்டிடத்தில் இருந்து வெளிவருவதைப் பார்த்து உண்மையை சட்டெனக் கணித்துவிட்டான்.

அப்படியா சங்கதி! அவசரக் குடுக்கை என்னிடமிருந்து தப்பிக்கவா பார்க்கிறாய்? ரோட்டின் எதிர் வரிசையில் அவனைக் கவனியாமல் கவிதா விறுவிறுவென நடந்து போவதை ரசித்துப் பார்த்தான்.

மறுகணம் கண்களை விலக்கி 'கவிதா எக்ஸ்போர்ட்ஸ்' முகப்பு பலகையைப் பார்த்தான். அவன் மனதில் ஒரு திட்டம் விரிந்தது. அந்த ஏற்றுமதி நிறுவனம் அவனுக்கு நன்கு தெரிந்ததுதான். அதன் முதலாளி, மேனேஜர் எல்லாம் அவனுக்கு ரொம்பவும் வேண்டியவர்கள். பரிச்சய மானவர்கள். அதைப் பயன்படுத்தி கவிதாவிற்கு சரியான 'செக்கிங்' கொடுக்க தீர்மானித்தான்.

அந்த திட்டத்தை நிறைவேற்ற காரை நிறுத்தி இறங்கியவன் 'கவிதா எக்ஸ்போர்ட்ஸ்' அலுவலகத்திற்குள் நுழைந்தான்.

வீடு வந்த கவிதா நேராய் தந்தையைத் தேடிப் போய் விஷயத்தைச் சொன்னாள்.



''என்ன ஏற்றுமதி நிறுவனத்தில் உனக்கு வேலை கிடைத்து விட்டதா?'' என்று அதிசயப்பட்டுத்தான் போனார்.

பூரணி அம்மாளுக்குத்தான் இது சுத்தமாய்ப் பிடிக்கவில்லை. ''என்னம்மா... இது என்னிடம் கூட ஒரு வார்த்தை சொல்லாமல் வேலையில் சேர்ந்து விட்டாய்?'' என பதட்டமுடன் அங்கலாய்த்தாள்.

கவிதாவுக்கு அவர்களை சமாதானப் படுத்துவதற்குள் போதும் போதும் என்றாயிற்று. ஆனாலும் பூரணி அம்மாள் விடுவதாய் இல்லை.

''அப்படியே வீட்டில் சும்மா இருப்பது பிடிக்கவில்லையென்றால்... நம் கம்பெனிக்கு போகலாமே? ராஜா கூட அடிக்கடி சலித்துக் கொள்வான். சரியான நம்பிக்கையான ஆட்கள் இல்லாமல் அலுவலகத்தை நடத்துவது கடினமாய் இருக்கிறது என்று. நீ வேண்டுமானால் நாளையிலிருந்து நம் ஆபீசுக்கு போகிறாயா அம்மா?'' பூரணி அம்மாள் பரிவுடன் கேட்க பதில் சொல்ல முடியாமல் கவிதா தவித்தாள்.

இங்கு பிரச்சினையே ராஜா தானே? அவனது குதறல்களுக்கு பயந்து தானே வெளியே ஓடுகிறாள்? இதில் அவளாவது... அவனது அலுவலகத்தில் வேலை பார்ப்பதாவது...?

கவிதா சமாளிக்க நினைப்பதற்குள் பின்னால் கனைப்புச் சத்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தால் ராஜா! ஓசைப்படாமல் வந்து பேசிய அனைத்தையும் கேட்டுக் கொண்டு கைகட்டியபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

பூரணி அம்மாள் அவனைப் பார்த்ததும் முகமலர்ந்தவள் ''பாரப்பா... நீயே சொல்லு. எங்கோ ஓர் அலுவலகத்தில் போய் வேலைக்குச் சேர்ந்திருக்கிறாளாம். அங்குதான் வேலை பார்ப்பாளாம். இதெல்லாம் நமக்குத் தேவையா? நம் அலுவலகத்தில் எவ்வளவு வேலைகள் இருக்கிறது? அதைக் கவனித்துக் கொள்ளாமல் எங்கோ போய் கை கட்டி நீ ஏன் வேலை பார்க்க வேண்டும்? என்றுதான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.''

பூரணி அம்மாள் தன் பேச்சை நியாயப்படுத்தி ராஜா விடம் கேட்க... கவிதா படபடப்புடன் அவன் என்ன சொல்லப் போகிறான்... என்பதைக் கேட்க ஆவலானாள்.

ராஜா ஒன்றும் பதில் சொல்லாமல் ஒரு நிமிடம் அவளையே உற்று நோக்கினான். பின் சட்டென இயல்பாகி கைகளை விரித்தவன், ''அது அவள் இஷ்டம் அம்மா. நாம் வீணாய் அவளது உரிமையில் சுதந்திரத்தில் தலையிட வேண்டாம் என நினைக்கிறேன்!'' என்றபடி விறுவிறுவென அங்கிருந்து அகன்று விட்டான்.

பூரணி அம்மாளே இதை எதிர்பார்க்கவில்லை. அவளுக்கு ராஜாவின் பதில் ஏமாற்றமாயிருந்தது. அதைவிட ஏமாற்றமும் ஆச்சரியமும் பட்டவள் கவிதா.

அம்மாவோடு சேர்ந்து கொண்டு, 'இனி நீ அங்கு கண்டிப்பாய் வேலைக்குச் செல்லக் கூடாது. நான் அதை ஒரு போதும் அனுமதிக்க மாட்டேன்' என்றெல்லாம் கட்டளையிட்டு ஆடுவான் என்று பார்த்தால்.. அவனோ சர்வசாதாரணமாய் உன் இஷ்டம்...வேலைக்குப் போ... என்று கூறிவிட்டானே... என்ன ஒரு ஆச்சரியம்!



அதிசயித்தவளுக்கு மறுநாள் வேலைக்குப் போனதும் தான் விஷயம் புரிந்தது. தன் ஸீட்டில் உட்காரப் போனவளை பணியாள் வந்து. ''நீங்கள் வந்ததும் உடனே வந்து பார்க்கும்படி மேனேஜர் சொல்லி இருக்கிறார் அம்மா...'' என்றதும் கவிதா புரியாமல் மேனேஜர் அறையை நோக்கிப் போனாள்.

மேனஜர் அவளைப் பார்த்ததும் முகம் குறுகிக் கொண்டார். ''உங்களுக்கு இங்கு வேலை இல்லை. நீங்கள் போகலாம்...!'' கவிதா திடுக்கிட்டு விட்டாள்.

''சார்... என் சொல்கிறீர்கள்?'' என்றாள் பதறியவளாய். திடுக்கிட்டவளை சர்வ சாதாரணமாய் மேனேஜர் பார்த்தார்.

''என்னால் ஒன்றும் செய்ய முடியாது. நேற்று முதலாளியுடன் போனில் பேசினேன். உன்னை புதிதாய் வேலைக்குச் சேர்த்திருக்கும் விஷயத்தைச் சொன்னேன். முதலாளி கோபப்பட்டு விட்டார். என்னுடைய அனுமதியில்லாமல் யாரையும் வேலைக்குச் சேர்க்க வேண்டாம். நான் வந்து பார்த்துக் கொள்கிறேன்... என்று உத்தரவும் போட்டு விட்டார். . இனி ஒன்றும் செய்ய இயலாது. உனக்கு வேலை இல்லை. நீ போகலாம்..''

மேனேஜர் படபடவெனப் பேசிவிட்டு குனிந்து கொண்டார். தனக்கு அதிக வேலைகள் இருக்கிறது நின்று தொந்தரவு செய்யாதே... என்பது போல் பைல்களை விரித்துப் புரட்ட ஆரம்பித்து விட்டார்.

கவிதாவுக்கு ஒரு கணம் என்ன செய்வதென்றே தெரியவில்லை. அப்படியே விழித்து விழித்து மேனேஜரைப் பார்த்தாள். நேத்து வேலைக்கு வந்து வேலை தேடி விட்ட

சந்தோஷம், வேலை பிடித்து விட்ட சந்தோஷம் எல்லாம் ஒரே நொடியில் போயிற்று.

சோகமாய் மீனாவிடம் விஷயத்தைக் கூறிவிட்டு ஹாண்ட் பேக்குடன் வெளிவந்தாள். வெளி வந்து இரண்டடி நடந்திருப்பாள்.

''என்ன மகாராணிக்கு வேலை போயிற்றா?!''

கிண்டலாய் குரல் ஒலிக்க சட்டெனத் திரும்பிப் பார்த்தாள்.

குறும்புச் சிரிப்புடன் கை கட்டியபடி ராஜா நின்று கொண்டிருந்தான்.



# 10

கவிதா அந்த இடத்தில் ராஜாவை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. பார்த்ததும், அவன் கிண்டல் குரலை கேட்டதும் எல்லாம் புரிந்து போயிற்று.

நேற்று வேலைக்குச் சேர்ந்து இன்று வேண்டாம் என விரட்டியடித்த மர்மமும் தெளிவாயிற்று. ஆக... எல்லாம் இவன் வேலைதானா? நேற்று வேலைக்குச் சேர்ந்திருக்கிறாள் என்று பூரணி அம்மாள் சொன்ன போது அவள் இஷ்டம் என தலையாட்டியது... புலியாய் பதுங்கியது



இதற்காகத்தானா? என்ன ஒரு வேஷம்? என்ன ஒரு நடிப்பு?

கோபம் பொங்க பார்த்தவளை அலட்சியமாய் ராஜா பார்த்தான்.

''உன் சீட்டைக் கிழித்தது நான்தான்! உனக்கு ஊரில் ஒரு இடத்திலும் வேலை கிடைக்காது. கிடைக்கவும் விடமாட்டேன்...''

''ஓஹோ! அதையும் பார்த்து விடுவோம்...!''

''நீ பார்க்கத்தானே போகிறாய்...'' மறுபடியும் ஆழமானப் பார்வையால் அவளைத் துளைத்தவன் என்ன நினைத்தானோ சட்டெனக் காரில் ஏறிக் கொண்டான். மின்னலாய் அங்கிருந்து மறைந்தான்.

அவன் அங்கிருந்து அகன்று வெகு நேரமாகியும் கவிதாவிற்கு மூச்சு அடங்கிய பாடில்லை. கோபம் அடங்காதவளாய் கொதித்துக் கொண்டிருந்தாள்.

'உன் சீட்டைக் கிழித்தது நான்தான்!'

என்ன ஒரு திமிர்?

'இனி உனக்கு வேலை கிடைக்காது. கிடைக்கவும் விடமாட்டேன்...!'

அதையும் தான் பார்த்து விடுவோம். நகரில் எத்தனை அலுவலகங்கள் இருக்கிறது. எல்லாவற்றிலுமா ராஜா தன் செல்வாக்கை தன் குறுக்குப் புத்தியை காட்ட முடியும்?

கோபம் கொஞ்சமும் குறையாதவளாய் கவிதா வீடு நோக்கி நடந்தாள்.

வேலைக்குச் சென்றவள் திடீரென திரும்பி வந்தது கண்டு வீடு திடுக்கிடத்தான் செய்தது. எல்லோரிடமும், ''வேலை பிடிக்கவில்லை. விட்டு விட்டேன்!'' என்று கூறி சமாளித்தாள்.

பூரணி அம்மாளுக்குத்தான் பூரண திருப்தி. அப்பா ராமனாதன் தான் நம்ப முடியாமல் அவளையே உற்று நோக்கினார்.

நேற்று குஷியுடன் குதி போட்டுக் கொண்டு வேலைக்கு ஓடியவள் இன்று வேலை பிடிக்கவில்லை என்றால் நம்பவா முடிகிறது?

இருந்தாலும் அவர் அவசரப்படவில்லை. மகளிடம் ஏதோ விஷயம் இருக்கிறது. பிறகு மெதுவாக கேட்டுக் கொள்ளலாம் என்று பேசாமல் இருந்து விட்டார்.

மாலை ஆறு மணிக்கு வீட்டுக்குள் நுழைந்த ராஜா தான் ரொம்பவும் வருத்தப்பட்டான். பயங்கர அனுதாப ஆள் கொட்டி பூரணி அம்மாள் முன் சோகமாய் நடித்தவன். ''அடாடா! உனக்கு வேலை போயிற்றா? எவ்வளவு வருத்தமான விஷயம் இது!'' என அங்கலாய்க்கவும் ஆரம்பித்தான்.

கவிதா அவன் நடிப்பைக் கண்டு வெகுண்டு போனவள் பூரணி அம்மாள் முன்னிலையில் அவனது குட்டை உடைத்து விடலாமா... என்று கூட நினைத்தாள்.

ஆனால் கள்ளங்கபடமற்ற பூரணி அம்மாளின் முகம் அவளைத் தடுத்தது. அந்த தாய் உள்ளத்திடம் போய் மகனை குறை சொல்ல அவள் மனம் இடங்கொடுக்கவில்லை.



அரிசிப் பற்களைக் கடித்துக் கொண்டு கோபம் பொங்க நின்றவளை ராஜாவும் வெகுவாய் ரசித்தான். அவனுக்கு தீனி போடுவது போல் பூரணி அம்மாளும் பேசினாள்.

''இனி அவள் எங்கும் வேலைக்குப் போக வேண்டாம். நம் அலுவலகத்திலேயே வேலைகளை கவனிக்கட்டும். என்னப்பா சொல்கிறாய்?''

ராஜாவிடம் சம்மதம் கேட்பது போல் பூரணி அம்மாள் பேச பதிலுக்கு ராஜா பலமாய் தலையாட்டியவன். ''ஆமாம்... ஆமாம், நம் அலுவலகத்தில் எவ்வளவு வேலைகள் இருக்கிறது. இவளைப் போன்ற திறமை சாலிகள் நமக்குத் தேவைதான்... ஆனால் என்ன...'' ராஜா இழுத்தவன். ''அதையும் இவள் பிடிக்கவில்லை என்று கூறிவிடுவாள். அதுதான் பயமாய் இருக்கிறது...'' என்று முடித்தான்.

கவிதாவுக்கு ஒரு கணம் என்ன பேசுவதென்றே தெரியவில்லை. யார் பார்வையில் படக் கூடாது என்று நினைக்கிறாளோ அவனிடமே வேலை பார்ப்பதா?

ஆனால் பூரணி அம்மாளோ அவளை மேலும் யோசிக்க விடாமல், ''என்னம்மா சொல்கிறாய்? நம் அலுவலகத்திற்கே போகிறாயா? உனக்கும் நேரம் போனது போல் இருக்கும்; ராஜாவிற்கு உதவி செய்தது போல் இருக்கும்...'' என்று அவளை வற்புறுத்தவே வேறு வழியில்லாது பலியாடுபோல் தலையாட்டினாள் கவிதா.

பூரணி அம்மாள் பூரண திருப்தியுடன் அங்கிருந்து அகன்றாள்.

அவள் அகன்றதுமே அங்கிருந்து நழுவப் போனவளை வேகமாய் தாவிப் பிடித்தான் ராஜா.

இடையோடு கரங்களை அனுப்பி வேகமாய் இறுக்கியவன், ''இனி நம் சல்லாபம் வீட்டில் மட்டுமல்ல... அலுவலகத்திலும் தான். புரிகிறதா?''

மிரட்டும் தொனியில் பேசியவன்.

அவள் கவிதா சிவந்து வெகுண்டு நோக்கி தன்னை விடுவிப்பதற்குள் அவனே சட்டென வலுவான கரங்களை இரும்புப் பிடியை விலக்கினான். எதுவுமே நடவாதது போல் விறுவிறுவென உள்ளே சென்று விட்டான்.

அன்று இரவு கவிதாவால் தூங்க முடியவில்லை. வெகு நேரம் யோசித்தாள். புலிக்கு இரையாவது போல் அவனது அலுவலகத்திற்கே சென்று வேலை பார்ப்பதா? என்ன செய்ய? என்ன முடிவெடுக்க?

தூக்கம் வராதவளாய் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டு அவள் சிந்திக்க மணி பன்னிரெண்டைத் தாண்டி விட்டது.

ராஜா பாக்கி இருந்த அலுவலக வேலைகளை முடித்து விட்டு படுக்கப் போனவன் அவளது அறையில் லைட் எரிவது கண்டு திடுக்கிட்டான். கவிதா ரூம் நோக்கி நடந்தான்.

ஓசைப்படாமல் வந்தவன் குட்டி போட்ட பூனை போல் அவள் நிலை கொள்ளாமல் நடப்பதைக் கண்டான். நொடியில் அவளது தடுமாற்றத்தை புரிந்தும் கொண்டான்.

மெல்ல கதவுகளைத் தட்டியவன் திடுக்கிட்டவளைப் பார்த்து ''இன்னும் தூங்க வில்லையா?'' என்றான் கரிசனத்துடன்.



கவிதா அச்சமயத்தில் அவனை சற்றும் எதிர்பாராததால் தடுமாறியவள். ''இல்லை... தூங்க வேண்டும்...'' என்றாள் வாய் குழறியபடி.

''நீ எதை நினைத்து குழம்புகிறாய்... என்று எனக்குத் தெரியும்...'' என்றபடி நிதானித்து ஒருகணம் அவளை ஆழமாய்ப் பார்த்தான்.

பின் மெல்லிய குரலில், ''அலுவலகத்தில் கண்ணியமாகத் தான் நடந்து கொள்வேன். நீ ஒன்றும் பயப்படத் தேவையில்லை...!'' முத்து உதிர்ந்து அவள் சந்தேகம் போக்கினான்.

திரும்பவும் அவளை ஒரு ஆழமானப் பார்வை பார்த்து விட்டு தனது ரூமை நோக்கி விறுவிறுவென நடக்க ஆரம்பித்தான்.

அவன் போவதையே புதிராகப் பார்த்துக் கொண்டிருந்தாள் கவிதா.



# 11

கவிதாவிற்கு வேறு வழியில்லாது போயிற்று. ராஜாவுடனே அவளது அலுவலகத்திற்கு காரில் கிளம்பினாள். பூரணி அம்மாள் அவளும் ராஜாவும் காரில் ஏறிப் போவதை கண்குளிரப் பார்த்தாள்.

காரில் ராஜா ஒன்றும் பேசவில்லை. நெரிசலான சாலையானதால் ஓட்டுவதிலே கவனமாயிருந்தான். கவிதாவும்

அவன் எங்கே குத்தலாய் எதும் பேசி விடக் கூடாதே... என்ற பயத்திலே இருந்தாள்.

அலுவலகமும் வந்து விட்டது. 'ராஜா அட்வர்டைசிங் அண்ட் க்ரியேஷன்ஸ்' அதுதான் அவனது அலுவலகம். விளம்பர ஏஜென்ஸி. பெரிய பெரிய கம்பெனிகளுக்கு பத்திரிகைகளிலும் டிவியிலும் விளம்பரம் தயாரித்து கொடுக்கும் உரிமம் பெற்றுள்ள ஏஜென்ஸி. நல்ல லாப நிலையில் ஓடிக் கொண்டிருந்தது.

கவிதா முன்பு ஓரிரு முறை அலுவலகத்திற்கு வந்திருந் தாலும் பிரமித்தபடியே காரிலிருந்து இறங்கினாள். அலு வலகக் கட்டிடம் புதுப்பிக்கப் பட்டிருந்தது. கிரானைட் முகப்பில் மூன்று மாடி. சுற்றிலும் கண்ணாடி பளபளப்பு. அலுவலகத்தை சுற்றி மறைத்தபடி விதவிதமான மரங்கள்.... அடர்ந்து படர் செடிகள்.

அந்தச் சூழ்நிலையே ரம்மியமாய் இருந்தது. ரசித்தபடி ஆவலாய் இறங்கியவளை ராஜா உற்றுப் பார்த்தான். அவள் முகத்தில் ஓடுகிற உணர்ச்சிகளை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. இருந்தும் எதையும் வெளிக்காட்டாத வனாய் விறுவிறுவென நடந்து ஆபீசுக்குள் அலுவலகத் திற்குள் நுழைந்து விட்டான்.

கவிதா தயங்கித் தயங்கித்தான் நுழைந்தாள். அலுவல கத்தின் ஒவ்வொரு பகுதியும் கம்பெனியின் அபார வளர்ச் சியைக் காட்டி அவளை பிரமிப்படையச் செய்தது.

ஐந்தே வருடத்தில் எவ்வளவு மாற்றங்கள்? அவள் முன்பு பார்த்த அலுவலகத்திற்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசங்கள்? நான்கு பேர் உட்கார்ந்து பணிபுரிந்த



இடத்தில் இப்போது நாற்பது பேர்கள்? கம்ப்யூட்டர் டெர்மினல்கள். ஃபேக்ஸ் மெஷின்கள். குளிரூட்டப்பட்ட அறைகள்... இன்னும்... இன்னும்...

என்ன ஒரு அசகாய வளர்ச்சி? இந்த ராஜா சாதாரண ஆளில்லை. படு சூரன்தான். ஐந்தே வருடத்தில் அலு வலகத்தை என்னமாய் மாற்றிவிட்டான்?

பூரணி அம்மாள் முன்பு சொன்னது அவளது காதுகளில் ரீங்காரமிட்டது. 'அவனைப் பற்றி ஏனம்மா கேட்கிறாய்? தூங்கும் நேரம் தவிர மற்ற எல்லா நேரமும் அவனுக்கு அலுவலகம்தான்... அங்கே தான். நேரம் காலம் தெரி யாமல் தவம் கிடப்பான்!' பூரணி அம்மாள் அலுத்துப் போய் சொன்னதை நினைத்துப் பார்த்தாள்.

சந்தேகமில்லை. ராஜா கடின உழைப்பாளிதான். தன்னை சீண்டி விளையாடி அடிக்கடி மனதை நோகடித் தாலும் அவனது மறுபுறம் குணத்தின் மறுபக்கம் வித்தி யாசமாய்தான் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள்.

பிரமிப்பு அடங்காமல் அலுவலகத்தையே சுற்றிச் சுற்றி பார்த்து வியந்தவளுக்கு அப்போதுதான் சூழ்நிலை உரைத்தது. ராஜா அவளுக்கு முன்னால் நடந்தவன் அவளுக்காக கொஞ்சமும் காத்திராது அவனது ரூமிற்குள் விறுவிறுவென சென்று விட்டான்.

அலுவலக பணியாளர்கள் அவளை விசித்திரமாய் பார்க்க... தான் பட்டிக்காட்டுத் தனமாய் அதுவரை பார்த் திருப்பது கண்டு கவிதாவிற்கு அவமானமாய் போயிற்று. அதை விட ராஜா தன்னை உரிய முறையில் அழைத்துச் செல்லாமல் யாரோ எவரோ போல் விட்டு விட்டு அவன்

பாட்டுக்கு சென்று விட்டது அவளுக்கு சினத்தை ஏற்படுத்தியது.

கோபம் துளிர்த்தவளாய் அலுவலகத்தின் மத்தியப் பகுதியில் இருந்த பெரிய அறையொன்றை நோக்கி நடந்தாள். அவள் நினைத்தது போலவே அந்த அறையின் முகப்பில் பிளைவுட் பளபளப்பில் 'ராஜா மேனேஜிங் டைரக்டர்' என்ற போர்டு பளபளத்தது.

கண்ணாடிக் கதவை வேகமாய்த் திறந்து உள்ளே நுழைந்தவளை மேலும் சினமேற்றியது, அவள் கண்ட காட்சி. உள்ளே ராஜா அவன் பாட்டுக்கு பைலை புரட்டுவதுமாய்... நொடிக் கொருதரம் சிணுங்கும் போனில் பேசுவதுமாய் 'பிஸியான' அவனது வேலைகளில் ஆழ்ந்து விட்டான்.

அவளை அழைத்து வந்ததை சுத்தமாய் மறந்து விட்டானா? அல்லது அவளை வேண்டுமென்றே இப்படிச் செய்து நோகடிக்கிறானா என்பதை புரிந்துகொள்ள முடியாதவளாய் கவிதா சினம் தணியாது அவனையே முறைத்துப் பார்த்தாள்.

ராஜா சில நிமிடங்கள் கழித்து தான் அவள் வந்ததை தன்னையே விழித்துப் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தான்.

''ஓ....! உன்னை மறந்தே போய் விட்டேனா?'' என்றபடி சீட்டை விட்டு ஆவலாய் எழுந்தவன் ஸ்டைலாய் மேஜை விளிம்பில் கால்கள் ஆட உட்கார்ந்து கொண்டு அவளைப் பார்த்தான். ''சொல், உனக்கு என்ன வேலை வேண்டும்?'' என்றான் அமைதியாய் சீரியஸான குரலில்.



கவிதா அவன் தன்னை அலட்சியப்படுத்திய கோபத்தில் இருந்தவள் திடீரென அவன் இப்படிக் கேட்டதும் ஒன்றும் தோன்றாமல் அவனையே உற்றுப் பார்த்தாள்.

ராஜா கடகடவெனச் சிரித்தான். ''ஏன் விழிக்கிறாய்? புரியவில்லை...? என்ன மாதிரியான வேலை உனக்குத் தெரியும் என்று கேட்டேன்?'' என்றான் விளக்கம் அளிப்பது போல்.

கவிதா சுதாரித்துக் கொண்டாள். ''எந்த வேலையானாலும் சரி.. என்னால் முடியும்...'' என்றாள் உறுதியான குரலில்.

''ஓஹோ... அப்படிச் சொல்கிறாயா?'' என்றவன் அவளையே விடாது கூர்ந்து பார்த்தபடி யோசித்தான்.

பின் தெளிவடைந்தவனாய். ''ஒரு வேலை இருக்கிறது. அதை உன்னால் செய்ய முடியுமா? நீ ஒப்புக் கொள்வாயா என்றுதான் சந்தேகமாய் இருக்கிறது.''

''நீங்கள் வேலையைச் சொல்லுங்கள் கண்டிப்பாக என்னால் முடியும்...''

கவிதாவின் உறுதியான குரல் கேட்டு அவளையே உற்றுப் பார்த்தவன் நிதானமாய் வார்த்தைகளை உச்சரித்தான்.

''பியூன் வேலை! உன்னால் முடியுமா?''

''பியூன் வேலையா?'' என்று அதிர்ந்து போய் கேட்டவளை சீரியஸாய் பார்த்தான் ராஜா.

''ஆமாம்! பியூன் முனுசாமி என்பவர் நாற்பது வருட காலம் நமக்காக உழைத்து ரிட்டையர்டு ஆகிவிட்டார். அந்த இடத்தில் வேறு ஆள் போடவில்லை. நாங்களே

ஒருவருக்கொருவர் பைல்களை கொடுத்து ஒத்தாசை செய்து சமாளித்து வருகிறோம். அந்த வேலைக்கு நீ இருந்தால் நன்றாக இருக்கும். ஆனால் நீ இதை கௌரவக் குறைச்சலாய் கருதினால்...''

ராஜா இழுத்தபடி திரும்பவும் அவளை தோண்டும் பார்வை பார்த்தான். கவிதாவிற்கு ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. அவன் நிஜமாகவே ஆள் இல்லாததால் பியூன் வேலையை சொல்கிறானா... அல்லது தன்னை வேண்டுமென்றே மட்டந்தட்டி பார்ப்பதற்காக அப்படிச் சொல்கிறானா என்பதை புரிந்து கொள்ள முடியாதவளாய் அவனையே உறுத்துப் பார்த்தாள்.

''எனக்கு தெரியும். நீ கௌரவக் குறைச்சலாகக் கருது கிறாய். உனக்கு சம்மதம் இல்லை போல் தெரிகிறது!''

கேலியுடன் கிண்டலுமாய் ராஜாவின் குரல் சிரிப்புடன் ஒலிக்க...

மறுகணமே வீராப்புடன் கவிதா நிமிர்ந்து கொண்டாள். ''சம்மதிக்கிறேன். வேலையை ஏற்றுக் கொள்கிறேன்...!'' என்றாள் உறுதியான குரலில்.



# 12

கவிதா யோசிக்கவில்லை. கொஞ்சமும் கௌரவக் குறைச்சலாகக் கருதவில்லை. ராஜா சொன்ன பியூன் வேலையை உடனடியாக ஏற்றுக் கொண்டாள்.



அப்படி வேலையை ஏற்றுக் கொண்ட மறுநிமிடமே, ''என் வேலையை சொல்லுங்கள் சார். செய்யத் தயாராயிருக் கிறேன்...'' என்றாள் ராஜாவிடம் குரலில் பவ்யம் பொங்கிய வளாய்.

அவன் சட்டென ''சார்'' மரியாதை கொடுத்துப் பேசி யதை கண்டு ராஜா அதிசயித்தவன் மறுநிமிடமே சுதாரித் துக் கொண்டான்.

அவசரமாய் தனது உதவியாளரை அழைத்து கவிதா விற்கு செய்ய வேண்டிய வேலைகளை கற்றுக் கொடுக் கும்படி உத்தரவிட்டான்.

ராஜாவின் 'உதவியாளினி'யாய் நுழைந்த அந்தப் பெண்ணைக் கண்டு கவிதா அசந்துதான் போனாள். மாநிறம்தான். இருந்தாலும் முகத்தில் ஒரு வண்டி 'பவுடர் மேக்கப்' போட்டிருந்தாள். உதடுகளில் அழுத்தமான லிப்ஸ்டிக். முப்பது வயதை தொட்டிருந்தாலும் கவர்ச்சி யான லோ ஹிப் லோ கட் சமாச்சாரங்களாய் இருபத்தைந்து போல் காட்டிக் கொண்டிருந்தாள்.

ராஜாவைப் பார்த்ததும் தேவையில்லாமல் பளீர் பளீரெனப் புன்னகைத்து அவள் கிறக்கமாவதை அந்த நொடியிலும் கவிதா கவனிக்கத்தான் செய்தாள். ராஜா போயும் போயும் இப்படி ஒரு மினுக்குக் காரியை தனது பி.ஏ.வாக வைத்திருக்கிறானே என்ற ஆச்சரியமும் அவளுள் எழவும் இல்லை.

ஆனால் அவள் மேற்காண்டு யோசிக்க சந்தர்ப்பமில் லாமல் போயிற்று. ராஜா சைகை செய்ததும் ரூமை விட்டு இருவரும் வெளிவந்தனர்.

அவள் பி.ஏ.கவிதாவை முன் நடத்தி சென்றவள் அலட்சியமாய்த் திரும்பி. ''ஆமாம் உன் பெயர் என்ன சொன்னாய்?'' என்று சட்டென ஒருமையில் விளக்கவும் கவிதாவிற்கு குப்பென சினம் பொங்கிற்று.

இருந்தாலும் மரியாதையை கேட்டு வாங்கிப் பய னில்லை என்ற முடிவுக்கு வந்தவளாய் சினம் அடக்கிப் பொறுமையாய். ''என் பெயர் கவிதா. உங்கள் பெயர்?'' என்று இழுத்தவாறு அவளைப் பார்த்தாள்.

அவள் பி.ஏ. அதற்கும் ஒரு மிடுக்கான வெட்டு வெட்டி யவள். ''நிர்மலா. ஆர்.நிர்மலா. அதுதான் என் பெயர். நான் தான். என்னைக் கேட்காமல் ஆபீஸில் ஒரு துறும்பு கூட அசையாது...!'' என ஜம்பமாய் சொல்லி முடித்தாள் நிர்மலா.

கவிதாவிற்கு அவள் ஏற்றி இறக்கிப் பேசிய தொனியைப் பார்த்து சிரிப்புதான் வந்து விட்டது. வந்த புன்னகையை அடக்க சிரமப்பட்டவளாய் குனிந்தபடி. நடந்தாள். நிர்ம லாவோ தான் சொன்னதைக் கேட்டதும் அப்படியே அரண்டு போய்விட்டாள் இவள் என்ற நினைப்புடன் கவிதாவை ஓரக்கண்ணால் எக்கலிப்பு பார்வை பார்த்தபடி நடந்தாள்.

அக்கவுண்டிங் செக்ஷனுக்கு அடுத்தாற் போல் இருந்த லெட்ஜர் ரூமை நோக்கித்தான் கவிதாவை கூட்டிப் போனாள் நிர்மலா. அங்கு வெவ்வேறு குறியீட்டு எண் களுடன் விதவிதமான லெட்ஜர்கள். பிளாஸ்டிக் உறை யுடன் நீள நீள பைல்கள் தென்பட... நிர்மலா கைகளை காற்றில் விசிறியபடி அவைகளைக் காட்டினாள்.



''பார்த்துக் கொள். இதுதான் லெட்ஜர்கள் பைல்கள் அடங்கிய லெட்ஜர் ரூம். இங்கிருந்து ஆபீஸ் பணியாளர் கள் கேட்கும் லெட்ஜர்களை பைல்களை எடுத்துக் கொடுப் பதுதான் உன் வேலை...''

நிர்மலா சொல்லியபடி கவிதாவைப் பார்க்க. அவள் சொன்ன அலட்சிய அதிகாரத் தொனியை வியந்தபடி பார்த்து கவிதா விழிக்க... அதை நிர்மலா வேறு விதமாக அவளுக்குப் புரியவில்லை என்று நினைத்து. ''நீ ஒன்றும் மலைக்கத் தேவையில்லை. பணியாளர்களே பைல் நம்பரை குறியீட்டைச் சொல்லி கேட்பர். அதை நீ சரியாக எடுத்துக் கொடுத்தால் போதும். புரிகிறதா?'' என்றதும் வந்த சிரிப்பை அடக்க கவிதாவிற்கு சிரமம்தான் ஆயிற்று.

ஒரு வழியாய் மற்ற விவரங்களையும் அதே அலட் சியத் தொனியில் பேசிவிட்டு நிர்மலா அங்கிருந்து அகலப் போனாள்.

அப்படி அகலப் போனவள் சட்டென ஏதோ ஞாபகம் உரைத்தவளாய் கவிதாவின் பக்கம் திரும்பி, ''ஆமாம். ராஜா சாருடன் காரில் அல்லவா வந்தாய்? எப்படி உன்னை காரில் ஏற்றிக் கொண்டார்?'' தனக்கேற்பட்ட பெரும் சந்தேகத்தை வினவினாள்.

கவிதா ஏற்கனவே தீர்மானித்து வைத்திருந்தவள்: ''நான் அவருடைய தூரத்து உறவு...'' என்றாள் அமைதியாக.

''தூரத்து உறவு என்றால்....?'' திருப்தியடையாத நிர்மலா நாக்கைச் சுழற்றியவாறு கேட்டு கண்களை உருட்ட கவிதாவிற்கு கோபமே வந்துவிட்டது:

''தூரத்து உறவென்றால்... உறவுதான்! மேற்கொண்டு உங்களுக்கு விபரம் தெரிய வேண்டுமென்றால் ராஜா சாரிடமே கேட்டுக் கொள்ளுங்கள்....'' என்றாள் முகத்தி லடித்தாற்போல்.

''ஓஹோ...! அப்படியா சங்கதி. நான் அவரிடமே கேட்டுக் கொள்கிறேன்....'' அவள் கோபத்தை கொஞ்ச மும் உணராமல் மறுபடியும் தலையை ஒரு அலட்சிய வெட்டு வெட்டி தளுக்கி மினுக்கியவாறு அலட்டலாய் அங்கிருந்து அகல ஆரம்பித்தாள் நிர்மலா.

அவள் அப்படி போவதை அதிசயமாய்ப் பார்த்து விட்டு வேலைகளில் கவனம் செலுத்த ஆரம்பித்தாள் கவிதா.

எடுபிடி போன்ற பியூன் வேலையானாலும் கவிதா விற்கு அது ஒன்றும் பாரமாய் தெரியவில்லை. செய்கிற வேலை எதுவானாலும் கௌரவம் பார்க்காமல் சுத்தமாய் செய்ய வேண்டும் என்பதே அவளது திடமான எண்ணம். அதனாலே பணியாளர்கள் கேட்ட பைல்களை சிரத்தை யோடு தேடியெடுத்து உடனுக்குடன் அவர்கள் முன் கொண்டு வைத்தாள்.

பணியாளர்களும் பெண் ஒருத்தி இப்படி திடீரென பியூனாய் முளைத்து வேலை பார்ப்பதை அதிசயமாய்ப் பார்த்து தங்களுக்குள் கிசுகிசுவெனப் பேசிக் கொண்டனர். ஓரிருவர் அக்கறையாய் கவிதாவையே நிறுத்தி விசாரித்துக் கொண்டனர்.

கவிதா அவர்களுக்கெல்லாம், ''புதிதாய் வேலைக்குச் சேர்ந்திருக்கிறேன். எம்.டி.சாரின் தூரத்து உறவு...'' என்ற ரெடிமேட் பதிலைச் சொல்லி விட்டு வேலைகளில் கவனமாய் இருந்தாள்.



இடையே ராஜா கூட சூபர்வைஸ் செய்வது போல் அவளுக்குத் தெரியாமல் வந்து அவள் சிரத்தையாய் பார்க்கும் அழகை ரசித்து விட்டு போனான்.

அன்ற வேலை முடிந்ததும் அவளாகவே முந்திக் கொண்டு ராஜாவிடம், ''நான் பஸ்ஸிலே வந்து விடு வேன். நீங்கள் போகலாம்...'' என்று சொல்லி விட்டாள்.

ராஜா காரில் ஏறப்போனவன் நின்று புருவம் உயர்த்தி அவளைப் பார்த்தான்.

அவன் ஏதாவது மறுத்துச் சொல்வான் என்று எதிர் பார்த்தவளுக்கு சப்பென்று போயிற்று.

ராஜா எதுவும் சொல்லாமல், சரி உன் இஷ்டம்... என்பது போல் தலையசைத்தவாறு காரில் ஏறிக் கொண்டான்.

வீட்டிற்கு வந்ததும் பூரணி அம்மாள் தான் பிலுபிலு வெனப் பிடித்துக் கொண்டாள். ''கார் இருக்கும் போது நீ... ஏன் சிரமப் படணும் குழந்தே?'' என்றபோது கவிதாவிற்கு அவர்களை சமாதானப்படுத்துவது பெரும்பாடாயிற்று.

ஒரு வழியாய் சமாதானப் படுத்தியதும். அடுத்த கேள்வியாய். ''வேலை பிடித்திருக்கிறதா? ராஜாவிடம் உனக்கு சுலுவான வேலைதான் கொடுக்கச் சொன் னேன்...'' என்ற போது கவிதாவிற்கு சிரிப்புதான் பொத்துக் கொண்டது.

ஆமாம் உங்கள் பையன் ரொம்பச் சுளுவான பியூன் வேலையைத்தான் எனக்குக் கொடுத்திருக்கிறார்... என்று அம்மாளிடம் சொல்லவா முடியும்? கவிதா அப்படிச் சொல்ல விரும்பாதவளாய் புன்னகைத்து. ''ரொம்பவும் பிடித்திருக்கிறதம்மா!'' என்றெல்லாம் கூறி சமாளித்தாள்.

அன்று இரவு நேரம் போகாதவளாய் மொட்டை மாடியில் நிலா வெளிச்சத்தில் நட்சத்திரங்களை ரசித்துக் கொண்டிருந்தாள் கவிதா. அதை கவனித்து பூனையாய் இருட்டோடு இருட்டாய் அங்கு ராஜா தோன்றினான். பூனையாய் ஓசைப்படாமல் நடந்தவன் அவள் பக்கம் வந்ததும் டக்கென அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

திடீரெனத் தன் முழு பலம் கொண்டு இறுக அணைத்த ராஜாவைக் கண்டு கவிதா திடுக்கிட்டுத்தான் போனாள். ராஜாவின் கரங்கள் மலைப்பாம்பாய் அவள் உடலை இறுக்கின. அந்த ஆண்மையின் திடீர் ஸ்பரிசத்தில் ஒரு கணம் தன்னிலை மறந்து துவண்டுதான் போனாள்.

ராஜா இறுக அணைத்தவன் சும்மா இருக்கவில்லை. மெல்ல குனிந்தவன் அப்படியே அவளது சிவந்த கன்னங்களில் மென்மையாய் முத்தமிடவும் ஆரம்பித்தான். அந்த முத்த சிலிர்ப்பில் கவிதா சிலிர்த்தவள் கண்கள் சொருக மயக்கத்துடன் அவன் நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்.

அவள் அப்படியே தன் கரங்களில் துவண்டு போய்க் கொண்டிருப்பதை ஓரக் கண்களால் வெகுவாய் ரசித்த ராஜா முகத்தில் குரூரப் புன்னகை அரும்பியவனாய் சட்டென கொஞ்சமும் எதிர்பாரா சமயத்தில் விடுவித்தான். விலகிக் கொண்டான்.

தன்னை அணைத்தவனோடு கவிதா மெய்மறந்து கிடந்தவள் அவன் திடீரென அப்படி விடுவித்து தள்ளி நின்றதும்தான் சுயநினைவுக்கு வந்தாள். எதிரே குரூரமாய் வன்மப் பார்வையுடன் நிற்கும் அவனைக் கண்டு துடித்துதான் போனாள்.



ராஜா விடுவதாய் இல்லை. நெருங்கி வந்தவன். "உன் உடம்பைக் காட்டி என்னை மயக்கப் போர்க்கிறாயா? இந்தப் பசப்பெல்லாம் என்னிடம் பலிக்காது. புரிகிறதா?" நெருப்பாய் வார்த்தைகளை வீசியதோடு மட்டுமில்லாமல் அவள் தோள்களை பிடித்து மென்னி குலுங்கும்படி உலுக்கி விட்டு அங்கிருந்து விருட்டென அகன்றான்.

துவண்ட மலராய் அப்படியே நொந்து போனாள் கவிதா. அவனது ஒவ்வொரு வார்த்தைகளும் அவளை தீயாய் சுட்டெரித்தது.

நானா மயக்கப் பார்த்தேன்? சும்மா இருந்தவளை வந்து அணைத்து உணர்ச்சிகளைத் தூண்டியது யார்? நானா?

கோபமாய் துடித்தவளுக்கு மறுகணமே எப்படி ராஜா அணைத்ததும் தான் சுயநினைவு இழந்து போனோம் என்ற அதிர்ச்சியும் தாக்கியது. அவர் அணைத்தாரென்றால் முதலிலே சுதாரித்து விடுங்கள் என்று விடுவித்துக் கொண்டிருக்கலாமல்லவா?

அதைவிட்டு விட்டு எப்படி அந்த அணைப்பில் என்னை மறந்து அவர் கரங்களில் துவண்டு கொண்டு... எப்படி நடந்தது இது? எவ்வளவு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டிய விஷயம்? நொடியில் எல்லாவற்றையும் மறந்து காணாத காதலரை கண்டது போல் அணைத்துக் கொண்டேனே...?

தன் மேலே சினம் கொண்டவளாய் ரொம்ப நேரம் கொதித்துக் கொண்டிருந்தாள் கவிதா. அன்று அந்த

சிந்தனையிலே மாடியில் இருந்து இறங்கி வந்து படுத்தாள். படுத்தவளுக்கு தூக்கம் வந்த பாடில்லை. தன்னையறியாமல், எவ்வளவு தடுத்தும் மீறி, அந்த உணர்ச்சிகள் ராஜா தன்னை அணைத்ததும் நெகிழ்ந்து போன அந்தக் கணங்கள் மீண்டும் மீண்டும் அவளுள் தோன்றி அவளை பாடாய் படுத்தின.

மறுநாள் அலுவலகத்தில் ஒன்றும் நடவாததுபோல் இயல்பாய் நடந்து கொண்டான் ராஜா. அப்பாடா... குத்திக் கிழிக்காமல் விட்டானே... என் நிம்மதியடைந்து கொண்டாள் கவிதா.

ஆனால் ஆபத்து நிர்மலா உருவத்தில் அவளைத் துரத்தியது. நிர்மலாவுக்கு என்னவோ கவிதாவை சுத்தமாய் பிடிக்கவில்லை. அடிக்கடி தேவையில்லாமல் வந்து அவளை நோண்டிக் கொண்டிருந்தாள். சம்பந்தமில்லாமல் வந்து அவளை அதிகாரம் செய்து கொண்டிருந்தாள்.

கவிதாவிற்கு அவள் காட்டும் அதிகார பந்தாவைக் கண்டு ஒருபுறம் கோபம் வந்தாலும் மறுபுறம் ஆச்சரியம் தான் பன்மடங்காய் விரிந்தது.

இப்படியும் தளுக்கிக் குலுக்கிக் கொண்டு ஒரு பெண் இருப்பாளா? ஆபீஸில் உள்ள ஆண் வர்க்கம் முழுவதும் அவளது அடிமை போலல்லவா நடந்து கொள்கிறாள்? ராஜாவின் பர்ஸனல் செகரட்டரி என்றால்... அலுவலகத்திற்கே அவள்தான் முதலாளி போல் அல்லவா நினைத்துக் கொள்கிறாள்?

கவிதாவின் வியப்பு அலுவலக தோழி லதாவுடன் பேசும்போது பன்மடங்காகியது.



''உனக்குத் தெரியாதா கவிதா? அவள் ராஜாவின் அலுவலக செகரட்டரி மட்டுமல்ல... விரைவிலே ராஜாவின் மனைவியாகப் போகிற ராஜாவின் அந்தரங்கக் காதலியும் கூட...!''

தோழி லதா அமைதியாய்ச் சொல்ல இடி விழுந்தது போல் உணர்ந்தாள் கவிதா.



# 13

கவிதாவால் நம்ப முடியவில்லை. ஆனால் லதா தெளிவாகச் சொல்லியிருந்தாள். நிர்மலா ராஜாவின் அந்தரங்க காதலியாம்! விரைவிலே அவருக்கு மனைவியாகப் போகிறவளாம்!

என்ன ஒரு அநியாயம்? நிர்மலா ராஜாவுக்கு மனைவியாம். அவளைத்தான் அவர் கட்டிக் கொள்ளப் போகிறாராம். யார் சொன்னார்கள்?

அது கிடக்கட்டும். முதலில் லதா என்ன சொன்னாள்? அந்தரங்கக் காதலி என்றுதானே? யார் இந்த நிர்மலாவா ராஜாவின் காதலி?

மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க கவிதா யோசித்தாள். அவளால் ஒரு நிலை கொள்ள முடியவில்லை. எண்ணங்கள் கோபாவேசமாய் எழுந்து அவளை திணறடித்தன.

நிர்மலாவைப் பார்த்தால்... அப்படித்தான் தெரிகிறது. தளுக்கிக் குலுக்கிக் கொண்டு அலட்டி மினுக்கிக் கொண்டு... யாரை வளைத்துப் போடலாம் என்றுதானே அலைகிறாள். அவளது பசப்பு வலையில் அவ்வளவு சுளுவாக ராஜா விழுந்து விட்டானா?

எண்ணங்களை நம்பாமலும், நம்பினால் ஜீரணிக்க முடியாமலும் கவிதா திணறிக் கொண்டிருந்தாள். அவளால் சட்டென ஒரு முடிவிற்கு வர முடியவில்லை.

ஒருவழியாய் மனதை தேற்றி அன்றைய வேலைகளில் ஆழ்ந்து கொண்டாள். ஆனால் நிர்மலாவோ அவளைச் சுற்றி சுற்றி வந்து அதட்டி உருட்டுவதிலே பெரும் பொழுதைக் கழித்தாள்.

அன்றும் அப்படித்தான். ஸ்டாப் ஒருவர் கேட்ட பைலை லெட்ஜர் ரூமில் கவிதா தேடிக் கொண்டிருக்க... அனாவசியமாய் கைகளைக் கட்டியவாறு அவள் முன் நிர்மலா தோன்றினாள்.

பெரிய மகாராணி போல் நிர்மலா நின்று தன்னையே உறுத்துப் பார்ப்பதை கவிதா உணர்ந்திருந்தாலும் அவளை கவனியாதது போல் பைலை தேடியெடுப்பதிலே கவனம் செலுத்தினாள். அது நிர்மாவிற்கு எரிச்சலை கிளப்பியிருக்க வேண்டும். சிங்கம் கர்ஜனை செய்வது போல் தொண்டையை பெரிதாய் செருமி தான் வந்திருப்பதை உணர்த்தினாள்.

கவிதாவும் அப்போதுதான் பார்ப்பது போல் திரும்பி நிர்மலாவைப் பார்த்தாள்.

நிர்மலா விடவில்லை. 'உன்னைத்தான் இங்கே... வா!' என்பது போல் கையசைத்தாள்.



கவிதா நெருங்கியதும், ''எவ்வளவு நேரமாய் பைலைத் தேடுகிறாய்? உன் மரமண்டைக்கு இது கூடவா பிடிபடவில்லை?''

அவள் மரமண்டை என்றதும் கவிதாவிற்கு வந்த கோபமே தனி. உதடு துடித்து கைகளை வீசி விட பரபரத்துப் போனாள். எல்லாம் ஒரு நிமிடம் தான். மின்னல் கீற்றாய் ஒளிர்ந்தது யோசனை ஒன்று அவளை அப்படியே அடக்கி விட்டது.

இந்த நிர்மலா சும்மா வரவில்லை. வேண்டுமென்றே நம்மிடம் வம்பிழுத்து அதை பெரும் பிரச்சினையாக்கத்தான் வந்திருக்கிறாள்? அதனால் விடக் கூடாது. அதற்கு கொஞ்சமும் இடம் கொடுக்கக்கூடாது.

சட்டென மனதில் தீர்மானம் எடுத்தவளாய் வந்த சினத்தை மின்னலாய் அடக்கிக் கொண்டு எந்தவித உணர்ச்சியுமில்லாமல் நிர்மலாவைப் பார்த்தாள்.

''இதோ... பைலை எடுத்து விடுகிறேன்...!'' என்று அமைதியாய் கூறிவிட்டு மீண்டும் பைலை தேடத் திரும்பிக் கொண்டாள்.

நிர்மலாவிற்கு சப்பென்று போயிற்று. அவள் கவிதாவை 'மரமண்டை' என்றதும் கோபமாய் ஆடுவாள் சண்டையிடத் துடிப்பாள் என்றெல்லாம் நினைத்தவளுக்கு அவள் எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் சாதுவாய்ப் போனது ஆச்சரியத்தை அதிகப்படுத்தியது.

வீணாய் தான் வம்பிழுத்தும் ஒதுங்கிப் போய் விட்டாளே... என்ற ஆதங்கம் அவளுள் கோபமாய் மாறிற்று. அதைக் காட்டும் விதமாய் கவிதாவை நோக்கி அதிகாரத் தோரணையில் சொடுக்கிட்டவள். ''பார், ஒழுங்காய்

வேலை பார்க்க வேண்டும். இல்லையேல் உன் சீட்டைக் கிழித்து விடுவேன் புரிகிறதா?'' என்று ஒரு மிரட்டல் மிரட்டிவிட்டு அங்கிருந்து அகன்றாள்.

கவிதாவிற்கு இம்முறை சினம் வரவில்லை. சிரிப்பு தான் வந்தது. சீட்டை கிழித்து விடுவாளாம். என்ன ஒரு அகங்காரம் இவளுக்கு? என்று நினைத்தவள். கூடவே, நிர்மலா ஏன் நம்மை எதிராளி போல் நினைத்து நடந்து கொள்கிறாள் என்று அதிசயத்தாள்.

நிர்மலாவின் நிலைமையோ வேறு விதமாய் இருந்தது. ராஜாவிற்கு கவிதா தூரத்து உறவு என்ற விஷயமும், கவிதா ராஜா வீட்டில்தான் தங்கியிருக்கிறாள் என்ற விஷயமும் அவளை ரொம்பக் குடைந்து விட்டது. இந்தக் கவிதா ஆபத்தானவள் எந்நேரத்திலும் தன் இடத்திற்கு போட்டியாய் வந்து விடக்கூடும் என்ற பயம் அவளைப் பிடித்து ஆட்டியது.

அதனாலே ஆரம்பத்திலேயே ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். கவிதாவை எப்படியாவது அலுவலகத்தில் இருந்து விரட்டியடிக்க வேண்டும். அப்போதுதான் தனக்கு நிம்மதி என்றே நினைத்தாள். அதனால் இப்படி கவிதாவை விரட்டி விரட்டினால் அதைப் பொறுக்காது கவிதாவும் பதிலுக்கு சண்டைக்கு வந்தால், அதையே பெரும் பிரச்சினையாக்கி அலுவலகத்தை விட்டே கவி தாவை விரட்டியடித்து விடலாம் என்று தான் நினைத்தாள்.

ஆனால் கவிதா அமைதி காத்ததும் நிலைமை தலை கீழாய்ப் போயிற்று. வேறுவழியில்லாததால் நிர்மலா சோர்ந்து நடந்தாள். ஆனாலும் சரியான சந்தர்ப்பத்தில் அவளுடன் சண்டையிட்டு மட்டம் தட்டி அவளாகவே ஆபீஸை விட்டு ஓடும்படி செய்துவிடவேண்டும் என்று சூளுரைத்துக் கொண்டாள்.



அன்று வேலைகள் நிறைய இருந்ததால் கவிதா தனது கவலைகளையெல்லாம் ஓரங்கட்டிவிட்டு வேலைகளில் ஆழ்ந்து விட்டாள்.

மாலை நான்கு மணி இருக்கும்.

ராஜா அழைப்பதாய் பணியாள் வந்து கூறவே அவனது ரூமை தேடிப் போனாள்.

ராஜாவின் பளபளப்பான அறைக் கதவைத் திறந்து விட்டு உள்ளே நுழைந்தவளை அதிர்ச்சி தாக்கியது.

மயக்கம் வராத குறையாய் அந்தக் காட்சியைப் பார்த் தாள்.

ராஜா சேரில் அமர்ந்திருக்க...

அவனுக்கு நெருக்கமாய் இடித்துக் கொண்டு அவனது கழுத்தை கைகளால் அணைத்து வளைத்தபடி நிர்மலா. இருவரும் சிரிக்கச் சிரிக்கப் பேசிக் கொண்டு.

அப்படியே திடுக்கிட்டுப் போனாள் கவிதா.



# 14

அந்தக் காட்சியைப் பார்த்து கவிதா அப்படியே அதிர்ந்துதான் போனாள். நிர்மலாவும் ராஜாவும் இவ்வளவு நெருக்கமாய் கொஞ்சும் காதலர்கள் போல்... கவிதாவால் நம்பவே முடியவில்லை மறுபடி மறுபடி கண்களை விரித்துப் பார்த்தாள்.

அவள் காண்பது உண்மைதான்! நிஜம்தான்! நிர்மலா ராஜாவின் குஷன் சேர் விளிம்பில் உட்கார்ந்து கொண்டு அவனது கழுத்தை கைகளால் வளைத்து அணைத்தபடி முகத்தோடு முகம் உரசியபடி...

என்ன ஒரு அநியாயம்? இந்த மினுக்குக் காரியின் மினுக்கில் அவ்வளவு எளிதாய் ராஜா மயங்கி விட்டாரா? அப்படியானால் தோழி லதா சொன்னது போல் உண்மை யிலே நிர்மலா ராஜாவின் காதலிதானா? இருவரும் நிஜ மாகவே காதல் செய்கிறார்களா?

அதிர்ச்சி பலமாய் அவளைத் தாக்க கவிதா ஒன்றும் தோன்றாமல் இருவரையும் மாறிமாறி உறுத்துப் பார்த்தபடி திகைத்துக் கொண்டிருந்தாள்.

ராஜாவும் அவளது திகைப்பை கண்கொட்டாது ரசித்த வன் சுதாரித்தவனாய். ''ஆமாம் உன்னை எதற்கு வரச் சொன் னேன்?'' என்றான் புரியாதவன் போல்.

நிர்மலா கவிதா தான் ராஜா முன் நெருக்கமாய் இருப் பதை நன்றாகப் பார்க்கட்டும் என மேலும் ராஜாவை நெருங் கியவள். ''என்ன விஷயம் டார்லிங்?'' என்று கொஞ்சி சிணுங்கவும் செய்தாள்.

கவிதாவிற்கு வந்த ஆத்திரமே தனி. நடக்கும் காட் சியைக் கண்டு எரிமலையாகியிருந்தாள். மூச்சு வாங்கப் பார்த்தவள் கையில் உள்ள பைலை அப்படியே அவர்கள் மேல் விசிறியடித்து விடலாமா? என்று கூட எண்ணி னாள். ஆனால் பொறுமையின் சிகரமாய் எல்லாவற்றை யும் அடக்கிக் கொண்டாள்.

''என்ன விஷயம் சார்... சொல்லுங்கள்?'' என்றாள் முகத்தில் எழுந்த உணர்ச்சிகளையெல்லாம் மறைத்தபடி.



அவள் சட்டென மாறி இயல்பாகி விட்டதை உணர்ந்த ராஜா அதிசயித்தவன் மறுநிமிடமே... தன்னையும் இயல்பாக்கிக் கொண்டு. ''ஒன்றுமில்லை. ஒரு பைலை தேடித்தரத் தான் உன்னைக் கூப்பிட்டேன். ஆனால் அது இங்கே கிடைத்து விட்டது. நீ போகலாம்...!'' என்றான் அமைதியாக.

விருட்டென வெளியேறி வந்தாள் கவிதா. வெளிவந்த வளுக்கு அப்படியே கண்ணெல்லாம் கலங்கி விட்டது. வாழ்க்கையையே பறிகொடுத்தவள் போல் தன் இருக்கை நோக்கி சோர்வாய் நடந்தாள்.

தன் இருக்கையில் தொப்பென உட்கார்ந்தவளை சிந்தனை அலைகள் வேகவேகமாய் எழுந்து தாக்கிற்று.

ராஜா நிஜமாகவே மயங்கி விட்டாரா? நிர்மலாவை காதலிக்க ஆரம்பித்து விட்டாரா? நிர்மலா அவர் காதலியா? அவளைத்தான் கட்டிக் கொள்ளப் போகிறாரா?

நினைக்க... நினைக்க மனதுள் அவள் கட்டிய பெரும் கோட்டை இடிந்து விழுவதுபோல் கவிதாவுக்கு இருந்தது.

லதா சொல்லும்போது கூட அவள் ராஜா மீது சந்தேகப் படவில்லை. மினுக்குக்காரி நிர்மலா வலையில் ராஜா விழுந்திருப்பார் என எள்ளளவும் ஐயம் கொள்ளவில்லை.

அனால் இன்று அவள் நினைப்பில் மண் விழுந்து விட்டதே? இரண்டு பேரும் காதலர்களாய் சரஸமாடும் காட்சியை... கண்ணால் பார்த்து விட்டாளே? கொஞ்சம் கூட வெட்கமில்லாமல் ராஜாவும் நிர்மலாவும் அவள் முன்னாலே கொஞ்சிக் கொண்டு..

மீண்டும் மீண்டும் அந்தக் காட்சி அவள் கண்முன் விரிந்து கவிதாவை வேதனைப் படுத்தியது. ராஜா தனக்கு

கிடைக்க மாட்டாரா? நிர்மலாவைத் தான்கட்டிக் கொள்ளப் போகிறாரா? என்ற எண்ணம் முள்ளாய் எழும்பிக் குத்தியது.

அப்படியானால்... நேற்று மாடியில் நின்றவளை திடீரென வந்து இறுகக் கட்டியணைத்தது எதற்காக? தன்னை உரிமையுள்ளவள் போல அடிக்கடி சீண்டி விளையாடுவது எதற்காக?

சிந்திக்க கவிதாவை இன்னொரு கேள்வி பூதாகாரமாய் எழுந்து தாக்கியது.

எல்லாம் சரி. ராஜா நிர்மலாவோடு பழகினால் எனக்கென்ன? நான் ஏன் கோபப்பட வேண்டும்? நான் ஏன் அதற்காக எதையோ பறிகொடுத்தவள் போல் இருக்க வேண்டும்? ஏன்? ஏன்?

ஆனால் கவிதாவால் அப்படி இருக்க முடியவில்லை. அவளையறியாமல் அவள் உள் மனதில் ராஜாவின் உருவம்தான் விரிந்து கிடந்தது. ராஜாவை அவள் மனமார நேசிக்கிறாள் என்ற உண்மையும் அவளுக்குப் புரிந்தது.



# 15

அடுத்து வந்த சில நாட்களில் கவிதா பித்துப் பிடித்த மாதிரிதான் இருந்தாள். அவளால் ஒன்றிலும் லயிக்க முடியவில்லை. வேலையையும் ஈடுபாட்டுடன் செய்ய முடியவில்லை. எந்த வித உணர்ச்சியுமில்லாமல் இயந்திரம் போல் தான் அவள் நடமாடிக் கொண்டிருந்தாள்.



அவளுக்கே அது ஆச்சரியமாயிருந்தது. திடீரென ஏன் இப்படி ஆகிவிட்டோம் என்று கூட நினைத்தாள். ராஜாவைப் பார்க்கும் போதெல்லாம் இனம் புரியாத உணர்ச்சியொன்று எழும்பி அவளை ஆட்டும். முன்பெல்லாம் இப்படி நேர்ந்ததில்லை. எங்கே ராஜா கிடைக்காமல் போய் விடுவானா? என்ற பயத்தில் இவ்வளவு நாள் மனதுள் பூட்டி வைத்த உணர்ச்சிகள் கிளர்ந்து விட்டு எழுகிறதோ? என்று கூட எண்ணினாள்.

ஆனால் ராஜா எந்தவித உணர்வையும் பிரதிபலிக்காமல்தான் நடந்து கொண்டான். அவளைப் பார்க்கும் போதும் சரி நேருக்கு நேராய் வரும் போதும் சரி... ஓரக் கண்ணால் ஒரு பார்வை பார்த்து விட்டு விடுவிடுவெனச் சென்று விடுவான்.

கவிதாவிற்கு அப்போதெல்லாம் ஏமாற்றமாயிருக்கும். தன்னைப் பார்த்து ஒரு சின்னப் புன்னகையாவது உதிர்த்து விட்டுச் செல்ல மாட்டானா? என்று ஏக்கமாய் ஏங்க ஆரம்பித்து விடுவாள்.

நிர்மலாதான் அந்த வாரம் அதீத சந்தோஷத்தில் நடமாடிக் கொண்டிருந்தாள். அன்று கவிதா முன்னிலையில் தான் ராஜாவுடன் நெருக்கமாய் காதலி அந்தஸ்தில் இருந்த காட்சி மீண்டும் மீண்டும் அவளுள் தோன்றி அவளை குஷியடையச் செய்திருந்தது.

அதிலும் கவிதாவின் சோகமயமான முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் அவளுக்கு கிளம்பும் சந்தோஷத்தில் முகமே வெடித்து விடும் போல் இருந்தது.

ஆனாலும் கவிதாவை சீண்டாமல் அவளால் இருக்க முடியவில்லை. அடிக்கடி அவளைக் கூப்பிட்டு அதிகாரத் தோரணையில் மிரட்டி உருட்டிக் கொண்டிரந்தாள்.

கவிதா எல்லாவற்றையும் பொறுமையாய் சகித்துக் கொண்டாள். தலையில் இடியே விழுந்து விட்டது. இது என்ன பெரிதா? என்பதுபோல் தாங்கிக் கொண்டாள். பூரணி அம்மாள் கூட... அவளது சோகமான மாறுதலைக் கேட்டு துணுக்குற்றவள். ''என்ன கவிதா உடம்பு எதும் சரியில்லையா? என்னிடம் கூட சொல்லக் கூடாதா அம்மா?'' என்று அக்கறையாய் விசாரித்தாள்.

அந்த வாரம் முழுவதும் அப்படியே போய் விட்டது. மறு வாரத்தின் முதல் நாள் ராஜா அவளை கூப்பிட்டனுப்பியதாய் பணியாள் சொன்னதும். ஒன்றும் தோன்றாதவளாய் எழுந்து அவனது அறையை நோக்கி நடந்தாள்.

அறைக் கதவைத் திறந்து நுழைந்தபோது ராஜா கம்பீரமாய் சேரில் சாய்ந்தபடி யாருடனோ போனில் பேசிக் கொண்டிருந்தான். அவளை சைகையாலே ஒரு நிமிடம் காத்திருக்கும்படி சொல்லிவிட்டு பேசி முடித்தவன் நிதானமாய் எழுந்து அவள் பக்கம் வந்தான்.

கைகளை கட்டியவாறு மேஜை மீது சாய்ந்து நின்றவன் அளவெடுப்பது போல் அவள் முகத்தையே உற்றுப் பார்க்க ஆரம்பித்தான்.

கவிதாவிற்கு அது சங்கடமாயிருந்தது. வரச் சொல்லி விட்டு நின்று நிதானமாய் நம்மை ஆராய்கிறானே? என்ற கோபம் கூட எழுந்தது. ''என்ன விஷயம் சார்?'' என்றாள் லேசான எரிச்சல் ததும்பும் குரலில்.

ராஜா உடன் பதில் சொல்லவில்லை. அவனது பார்வையை மாற்றாமல் தொடர்ந்து அவளை விழுங்குவது போலவே பார்த்தான்.



''சார், என்ன விஷயம்? உங்களிடம் தான் கேட்கிறேன்?'' என்றாள் கவிதா குரலின் தொனியை உயர்த்தி.

ராஜா அதற்கும் ஒன்றும் பதில் சொல்லாதவனாய் அவளையே கண்களை விரித்து இமைக்காது பார்த்தவன் அவளை நெருங்கினான்.

நேருக்கு நேராய் கண்களையே பார்த்துக் கொண்டு நெருங்கியவன் சட்டென அந்தக் காரியத்தைச் செய்தான்.

அவள் சற்றும் எதிர்பாராத தருணத்தில் அவளை அப்படியே இறுகத் தழுவிக் கொண்டவன் அவசர அவசரமாய் அவளது உதடுகளில் இதழ் பதிக்கவும் செய்தான்.



# 16

சட்டென ராஜா செய்த காரியத்தைப் பார்த்து திடுக்கிட்டுப் போனாள். அவன் காதலனைப் போல் அவளை இறுகத் தழுவி முத்தமிட்டுக் கொண்டிருந்தான். அவன் என்ன காதலனா இல்லை கட்டிய கணவனா? என்ன திமிர்? எப்படியொரு நெஞ்சழுத்தம்?

சினம் பொங்கியவளாய் அவனது பிடியிலிருந்து பலவந்தமாய் விடுபட முயன்றாள். விலக முடியவில்லை. அவனது பிடி இரும்புப் பிடியாய் இருந்தது. ராஜா அவள் இதழ்கள் மீது அழுத்தமாய் முத்தமிட்டு விட்டுத்தான் விடுவித்தான்.

நெருப்புத் துண்டை தொட்டது போல் துடிதுடித்து நின்றவளை அலட்சியமாய் பார்த்தவாறு ராஜா அவள் காதுப்பக்கம் குனிந்தவன், ''இப்போது குளிர்ந்து விட்டாயா? ஒரு வாரம் இந்த அணைப்பு இல்லாததால்தானே தக தகத்து விட்டாய்?'' என்று வினவவும் அவள் சினம் மேலும் அதிகமாயிற்று.

''என்ன உளறுகிறீர்கள்?'' என்றாள் ஆவேசம் குறையாமலே.

ராஜா சிரித்தான். ''நான் உளறவில்லை. எல்லாவற்றை யும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். அன்று என்னையும் நிர்மலாவையும் நெருக்கமான நிலையில் பார்த்ததுதானே உன்னை இந்தப் பாடுபடுத்தி விட்டது? மூட் அவுட்டாகி ஒரு வாரம் நடைப்பிணம் போல் அத னால்தானே அலைந்தாய்? அதை சரிபண்ணவே நிர்ம லாவை அணைத்தது போல் உன்னையும் அணைத்தேன். முத்தமிட்டேன். இனி நீ நிர்மலாவைப் பார்த்து பொறாமைப் பட வேண்டிய அவசியமில்லை. இப்போது புரிகிறதா?''

தனது நீண்ட பிரசங்கத்தை குறும்புப் பார்வையுடன் விஷமாய் ராஜா சொல்லி முடிக்கவும் கவிதா அதிர்ந்துதான் போனாள்.

அவளுக்கு ஒரு கணம் ஒன்றும் ஓடவில்லை. என்ன செய்வதென்றும் தெரியவில்லை. அவள் நிர்மலாவை அணைத்தது கண்டு பொறாமைப்பட்டாளாம். ஒரு வாரமாய் மூட் அவுட் ஆகி விட்டாளாம். அதனால் அவளது வேதனையைத் தணிக்க அணைத்துக் கொண்டானாம். நிர்மலாவிற்கு செய்தது போல் முத்தமிட்டுக் கொண்டானாம். என்ன ஒரு அடாவடித்தனம்?



கவிதாவால் அவன் சொன்னதைக் கேட்டுப் பொறுக்க முடியவில்லை. அவனது பதில் அவளது கோபத்தை அதிகமாக்கி அவளை ஆவேசப்படுத்திவிட்டது.

வெகுண்டவள் டக்கென கையை ஓங்கி வேகமாய் அவனை அறையப் போக... சட்டெனக் கைகளால் அதை தடுத்து விட்டான் ராஜா. தடுத்தவன் குறுஞ்சிரிப்பு மாறாமல் அவளது கைகளை கீழிறக்கி, ''இந்தப் பாசாங்கெல்லாம் என்னிடம் வேண்டாம். இதற்கெல்லாம் பயப்படுகிறவன் நானில்லை...!'' என்றவன் விடாது, ''ம் ம்... நீ... போகலாம் இனியும் உன்னுடன் என்ன பேச்சு?'' என்றான் அதட்டும் குரலில்.

கவிதா உணர்ச்சிகள் ததும்பக் கொந்தளித்துப் போயிருந் தாள்.

அவளுக்கு அந்த கணம் என்ன செய்வது எப்படி நடந்து கொள்வது என்றே தெரியவில்லை. ராஜாவை முறைத்துப் பார்த்தவாறே வெளியே வந்தாள்.

அன்று முழுவதும் அவளால் சரிவர யோசிக்க முடிய வில்லை. ஒன்றையும் சரிவர புரிந்து கொள்ள முடிய வில்லை. ராஜாவின் மனநிலைதான் என்ன? அவன் என்ன எண்ணத்தில் நம்மிடம் பழகுகிறான்? என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்தாள்.

நிர்மலா ராஜாவின் காதலியாம். விரைவில் மனைவி யாகப் போகிறவளாம். அதற்கேற்றாற் போல்தான் இருவரும் பழகுகிறார்கள். பின் நம் நிலை?

கவிதா இப்படி நினைத்துப் பார்த்ததும் பகீரென்றது. ராஜா முன்பொருமுறை அவளிடம் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

'உன்னை வைத்துக் கொள்ளப் போகிறேன். மனைவியாய் அல்ல. ஆசை நாயகியாய்...!' அன்று இதே ராஜாதான் சொன்னான். அப்படியானால்...?

நிர்மலா மனைவியாகப் போகிறவளா?

நான் ஆசை நாயகியா? என்னவொரு கொடுமை? நினைத்துப் பார்த்தவளுக்கே நெஞ்சு கொதித்தது.

இதற்கு உடனடியாக முடிவு கட்ட வேண்டும். அல்லது ராஜாவிடமிருந்து விலகிப் போகவேண்டும். என்ன செய்வது?

ஒன்றும் தோன்றாமல் ரொம்ப நேரம் சிந்தித்தாள். ஒரு முடிவிற்கும் வர முடியாமல் வீட்டிற்குக் கிளம்பினாள். வீட்டினுள் அவளுக்கு ஓர் அதிர்ச்சியான ஆச்சரியமான செய்தி காத்திருந்தது.



# 17

வீட்டில் சோகமயமாய் நுழைந்த கவிதா ஹாலில் பூரணி அம்மாளும் தந்தை ராமனாதனும் ஜோசியக்கார ஐயரிடம் மும்முரமாய் ஏதோ பேசிக் கொண்டிருப்பதைக் கண்டாள். ஐயர் பழைய ஓலைச் சுவடிகளையும் பஞ்சாங்கத்தையும் புரட்டிப் புரட்டி விஷயங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

கவிதாவிற்கு ஓரளவு புரிந்தது. ஏதோ முக்கியமான விசேஷத்திற்காக நேரம் கணித்து நாள் குறிக்கிறார்கள்



என்பதைத் தெரிந்து கொண்டாள். எதற்காக? அப்படி என்ன விசேஷம் வரப்போகிறது?

குழம்பியவளை, தற்செயலாய் நிமிர்ந்த பூரணி அம்மாள் கவனித்து விட்டாள்.

''கவிதாவா... வா... வா... எல்லாம் உன் விஷயமாத்தான் பேசிக் கொண்டிருக்கிறோம்.''

'என் விஷயமாவா?' திடுக்கிடலை மறைத்து வலுக்கட்டாயப் புன்னகையை உதிர்த்தவாறே பூரணி அம்மாளின் பக்கம் போனாள். ராமனாதனும் அவளை சிரிப்புடன் அர்த்தமான பார்வை பார்த்தார்.

கவிதா புரிந்து கொள்ள முடியாமல் தவிப்பதைப் பார்த்ததும். ''புரியவில்லையாம்மா? எல்லாம் உன் திருமணம் பற்றித்தான்..!'' என்றார் புதிர் நீக்கியவராய்.

'திருமணமா?'

மறுபடி வாய்பிளந்தவளை பூரணி அம்மாள் தான் அசட்டுச் சிரிப்புடன் பார்த்தாள்.

''எனக்குத் தெரியாதா கவிதா? எல்லாவற்றையும் ராஜா சொல்லி விட்டான். இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இருவரும் ஒரே வீட்டில் எதிரும் புதிருமாய் நடந்து கொள்ள முடியும்? சீக்கிரம் கணவன் மனைவி ஆகிவிட வேண்டியது தானே?''

பூரணி அம்மாள் சொல்ல அவளை மறுபடியும் ஆச்சரியம் தொற்றிக் கொண்டது.

கணவன் மனைவி ஆகிவிட வேண்டியதுதானா? யாரைச் சொல்கிறார்கள்? என்னையும் ராஜாவையுமா? நாங்கள் கணவன் மனைவியாய்... எப்படி... இது... எல்லாவற்றையும் ராஜா சொல்லிவிட்டானா? என்ன இது..? இங்கு என்னதான் நடக்கிறது?

மேலும் தவித்தவளை பூரணி அம்மாளின் வார்த்தைகள் ஆறுதல்படுத்தியது.

''ராஜா உள்ளே ரூமில்தான் இருக்கிறான். போய்ப் பார். அவன்தான் எல்லா ஏற்பாடுகளையும் உடனடியாகச் செய்யச் சொல்லிவிட்டான்... பாரம்மா...''

கவிதா ஒரு கணம் என்ன நடக்கிறது என்றே தெரிய வில்லை. ஆபீஸில் நிர்மலாவுடன் கொட்டமடித்து அவளை நோகடித்தவன் அவசர அவசரமாய் கல்யாண ஏற்பாடு களை செய்யச் சொல்லியாயிற்றாம். கல்யாணம் யாருக்கு? அவளுக்கும் ராஜாவிற்குமாம்...! அவளைக் கேட்காமலே... அவளின் சம்மதம் பெறாமலே?

துடித்துப் போய் விறுவிறுவென வீட்டுப் படியேறி மூச்சு வாங்க ராஜாவின் ரூமினுள் நுழைந்தாள். நுழைந்தவளை எந்தவிதச் சலனமுமில்லாது பேப்பரொன்றை புரட்டிக் கொண்டிருந்த ராஜா பார்த்து விட்டு திரும்பவும் பேப்பரில் ஆழ்ந்து கொள்ள போனான்.

''உங்களிடம் பேச வேண்டும்...''

கவிதாவின் உறுதியான குரல் அவனது கவனத்தை கலைத்தது.

பேப்பரை மூடி விட்டு அவள் பக்கம் வந்தான். நிதான மாய் அவளது பட படப்பை அளவெடுத்தவன். ''என்ன தலை வெடித்து விடும் போல் இருக்கிறதா?'' என்றான் அதே அமைதியுடன்.

கவிதா பதில் சொல்லாது அவனையே உறுத்துப் பார்த்தாள். இவன் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டே விளையாடுகிறவன். இவனாகவே பதில் சொல் லட்டும்.



கவிதா நினைத்த மாதிரியே ராஜாவே தொடர்ந்தான். ''நான் தான் நாள் குறித்து கல்யாண ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னேன். வருகிற பதினைந்தாம் தேதி நல்ல நாள் அன்று தான் கல்யாணம் புரிகிறதா?''

ராஜா அந்த விஷயத்தைச் சொல்ல கவிதா திடுக்கிட்டுத் தான் போனாள்.



# 18

ஆயிற்று. கவிதாவின் சம்மதம் கேட்காமலே கவிதா வின் சம்மதம் இல்லாமலே காரியங்கள் மளமளவென ஆயிற்று.

கவிதாவிற்கு நடப்பது எல்லாமே குழப்பமாய்த்தான் இருந்தது. சில சமயம் இதெல்லாம் கனவுதானா..? என்று கூட சந்தேகம் வந்துவிட்டது. தந்தை ராமனாதன் தான் அடிக்கடி அவளை ஆறுதல்படுத்தினார்.

''எல்லாம் நல்லதுக்குத்தான். நீ ஒன்றும் குழம்பாதே யம்மா. உண்மையில் நீ ராஜாவை விரும்புகிறாய்தானே? ராஜா மேல் உனக்கு ஆசைதானே? பிறகு எதற்கு தயக்கம்? சம்மதித்துவிடு அம்மா...!''

தந்தையின் வார்த்தைகள் கவிதாவை ரொம்பவும் யோசிக்க வைத்தது. ராமனாதன் சொல்வது போல் ராஜாவை அவள் விரும்புகிறாள். ராஜாவை கட்டிக் கொள்ள அவளுக்

கும் ஆசைதான். ஆனால்... ராஜா... ராஜா அவளிடம் நடந்து கொள்ளும் விதம்... அவன் அவளை படுத்தும்பாடு...?

கட்டிக் கொள்ளப் போகிற காதலன் போலவா ராஜா அவளைக் கல்யாணம் செய்கிறான்..? இல்லையே...! ஏதோ சந்தையில் ஆட்டையோ, மாட்டையோ விலைபேசி வாங்குவது போல் அல்லவா வாங்கப் பார்க்கிறான்?

உண்மையில் ராஜா நம்மை விரும்புகிறாரா? உண்மையில் அவருக்கு நம் மீது ஆசை இருக்கிறதா?

கவிதா யோசித்தவளை திடீரென அந்த எண்ணம் எழுந்தது. உலுக்கியது.

ஆமாம். எல்லாம் சரி. நிர்மலா. நிர்மலா என்ன ஆனாள்? அவள் என் அந்தரங்கக் காதலி. அவளைத்தான் கட்டிக் கொள்ளப் போகிறேன் என்று சொன்னதெல்லாம் என்ன வாயிற்று? அலுவலகத்தில் அவளோடு சரசமாடியது எல்லாம் மறக்கக் கூடியதா?

''இனி நீ அலுவலகம் வரத் தேவையில்லை. வீட்டிலே இருந்தால் போதும்...''

எந்தவித உணர்ச்சியையும் பிரதிபலிக்காது சொன்னவனை துணுக்குற்றுப் பார்த்தாள்.

''ஏன்..? நான்... ஏன் வரக்கூடாது? நான் கண்டிப்பாய் வருவேன்...'' சொல்லப்போனவளை அவள் வார்த்தைகளை முடிக்கும் முன்பே குறுக்கிட்டான்.

''இதை நான் சொல்லவில்லை. அம்மாதான் சொல்லச் சொன்னார்கள். அம்மாவிடமே கேட்டுக் கொள்...''



இயந்திரமாய்ச் சொல்லிவிட்டு விறுவிறுவெனச் சென்று விட்டான் ராஜா. கவிதா புரியாதவளாய் பூரணி அம்மாளைத் தேடிப் போனாள்.

''ஆமாம். நான்தான் சொன்னேன். நீ இந்த வீட்டிற்கே மகாராணி ஆகப் போகிறாய்? இன்னும் ஏனம்மா அலுவலகத்தில் போய் வேலை என்ற பெயரில் சிரமப்பட வேண்டும்?'' என்று சொன்ன பூரணி அம்மாளிடம் பதில் பேச முடியாமல் கவிதா தவிக்கத்தான் செய்தாள்.

ஆனாலும் உடனடியாக அவர்களிடம் மறுப்பு சொல்ல கவிதாவால் முடியவில்லை. அதே நேரம் அலுவலகம் செல்லாமலும் அவளால் இருக்க முடியாது. நிர்மலா... நிர்மலாவைப் பற்றி முக்கியமாக அவளுக்குத் தெரிந்தாக வேண்டும்.

பூரணி அம்மாளிடம் அன்று ஒரு நாள் அலுவலகம் சென்று தனது வேலைகளை பொறுப்பை ஒப்படைத்து விட்டுத் திரும்பி விடுவதாய் கூறி சம்மதம் பெற்றவளாய் அலுவலகத்திற்கு கிளம்பினாள்.

அலுவலகத்தை நெருங்க நெருங்க அவளை பரபரப்பு தொற்றிக் கொண்டது.

நிர்மலாவிற்கு விஷயம் தெரிந்திருக்குமோ? ராஜாவிற்கும் தனக்கும் திருமண ஏற்பாடுகள் நடைபெறுவதை அறிந்தால் அவளுக்கு எப்படி இருக்கும்? இது தேவையா? இப்படி வீணாய் அடுத்தவர் மனசைக் கெடுத்து. அதில் ஆசையைப் பரப்பி ஏமாற்றும் ராஜா எப்படி நல்லவராய் இருக்க முடியும்? அவரை எப்படி கட்டிக் கொள்வது?

எண்ணங்களில் அலைகழிந்தவளாய் அலுவலகத்திற்கு நுழைந்தவளை எதிர்கொண்டு புன்னகையுடன் வரவேற்றாள் நிர்மலா.



# 19

நிர்மலா வெறும் புன்னகையோடு மட்டும் அவளை எதிர்கொள்ளவில்லை நெருங்கியதும் ''வாழ்த்துக்கள்..'' என்று கூறி கைகொடுக்கவும் செய்தாள்.

''வாழ்த்துக்களா.. எதற்கு?''

வியந்தவளை அதிசயமாய்ப் பார்த்தாள் நிர்மலா.

''எல்லாம் எனக்குத் தெரியும்..'' என்றாள்.

''தெரியுமா?''

''ஆமாம். ராஜா சாரை நீங்கள் விரும்புவது விரைவில் நீங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ளப் போவது... எல்லாம் தெரியும்..''

''அப்படியானால்... நீ...நீங்கள்?'' திக்கித் திணறியபடி கேட்டவாறு கவிதா அவளை ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

கவிதா இப்படிக் கேட்டதும் நிர்மலாவிற்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. சிரிப்பினூடே ''வேறு என்ன? வழக்கம் போல் ராஜா சாருக்கு ஆசை நாயகியாகவே இருந்து விட்டுப் போகிறேன்!'' கண்சிமிட்டியபடி நிர்மலா கூற கவிதா திடுக்கிட்டுத்தான் போனாள்.

அவள் திகைப்பை அதிகமாக்குவது போல், ''நிர்மலா விளையாடியது போதும்...!'' என்ற கணீர் குரல் கேட்டு இருவரும் திரும்பினர்.



ராஜா குறும்புச் சிரிப்புடன் வந்து கொண்டிருந்தான்.

வந்தவன் விடாது கவிதாவைப் பார்த்து, ''உன்னைத் தான் அலுவலகம் வரவேண்டாம் என்று சொல்லியிருக் கிறேனே...?'' என்று ராஜா இழுத்ததும் கவிதா புதிராய்த் தான் பார்த்தாள்.

ராஜா குறும்புப் புன்னகையை மாற்றாமலே, ''எல்லாம் நிர்மலா பற்றி தெரிந்து கொள்ளத்தானே? இல்லாவிடில் உனக்குத்தான் தலை வெடித்துவிடுமே?'' என்றபடி சிரிக்கவும் அவனுடன் நிர்மலாவும் சேர்ந்து சிரித்தாள்.

கவிதாவிற்கு ஓரளவு புரிந்தது. ராஜாவும் நிர்மலாவும் சேர்ந்து அவளிடம் 'ஏதோ' நடித்திருக்கிறார்கள். அவள் கண்ட து உண்மை போல் நம்ப வைத்திருக்கிறார்கள். அப்படி யானால்?

திடுக்கிடலோடு நிமிர்ந்த கவிதா, ''என்ன இருவரும் பேசி வைத்துக் கொண்டு நடிக்கிறீர்களா? என்னால் நம்பவே முடியவில்லை!'' வியக்கவும் செய்தாள்.

ராஜாவும் நிர்மலாவும் சிரிப்பு மாறாமல் பெருமூச்சு விட்டனர்.

''அப்பாடா, இப்பவாவது அதை கண்டுபிடித்தாயே!'' என்று ராஜா அலுக்கவும் அவளுள் இருந்த புதிர் விலக ஆரம்பித்து விட்டது. இருந்தாலும் எல்லாவற்றையும் ராஜாவின் வாயினாலே தெரிந்து கொள்ள விரும்பியவளாய், ''சொல்லுங்க. இங்கு என்னதான் நடக்கிறது?'' என்றாள் ஆவல் கொண்டவளாய்.

நிதானமாய் அவளது கண்களைப் பார்த்து ராஜா சிரித் தவன். ''அவசரம் வேண்டாம். எல்லாவற்றையும் சொல் கிறேன் கண்மணி....'' என்றபடி அவள் பக்கம் வந்து அவள் கையினை உரிமையோடு தன் கரங்களில் சிறைப்படுத்திக் கொண்டான்.

''கண்மணி, முதலில் ஒரு விஷயத்தை தெளிவுபடுத்தி விடுகிறேன். நிர்மலா என் ஆசைநாயகியோ... காதலியோ அல்ல... அவளுக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. சொல்லப்போனால் நிர்மலா இந்த அலுவலகத்தின் திறமையான மேனேஜர். நிர்வாகி. இவ்வளவு நாளும் நிர்மலா உன்முன் நடத்தியது எல்லாம் நடிப்புதான். ஒரு விஷயத்தை நீ கூர்ந்து கவனித்திருந்தால் ஆரம்பத்திலே எங்களது 'நடிப்பை' கண்டுபிடித்திருப்பாய் ஆனால் நீ கவனிக்கவில்லை...''

''கவனிக்கவில்லையா? என்ன சொல்கிறீர்கள்?''

''ஆமாம். முதலில் நிர்மலா கழுத்தில் என்ன தொங்கிக் கொண்டிருக்கிறது என்று பார்...''

கவிதா அப்பாவியாய்த் திரும்பிப் பார்த்தவள் அதிர்ந்தாள். சிரிப்புடன் இருக்கும் நிர்மலாவின் கழுத்தில் தாலி! அதை ஒரு போதும் கூர்ந்து கவிதா கவனித்ததில்லையே... அப்படியானால்... நிர்மலா...?''

மிரண்டவளின் திகைப்பை உடனே போக்கியவனாய் ''நீ.. நினைப்பது சரி; நிர்மலா கல்யாணமானவள்தான். அவளுடைய கணவர் பெயர் ரவி. பேங்க் ஒன்றில் வேலை பார்க்கிறார். எனக்காகத்தான் பெரிய மனது பண்ணி ஆசை நாயகி போன்ற வேஷத்தை நிர்மலா நடித்தும் கொடுத்தாள். புரிகிறதா?''

'ஓஹோ! இப்படியும் ஒரு கூத்தா?' என கவிதா வியந்து போனவள், ''அது சரி. எதற்கு இந்த நடிப்பு? இந்த ஆசை நாயகி நாடகம்?'' என்றவளைப் பார்த்து கடகடவெனச் சிரித்தான் ராஜா.

''எல்லாம் உனக்காகத்தான்...! உனது உண்மையான மனநிலையை அறிந்து கொள்ளத்தான்...!''



''உண்மையான மனநிலையா?''

''ஆமாம். நிஜமாகவே நீ என்னை விரும்புகிறாயா... என் மீது உனக்கு அன்பிருக்கிறதா என்பதைக் கண்டு பிடிக்கத்தான் இந்த விபரீத சோதனை...!''

''அதில் வேறு சந்தேகமா?'' என கவிதா வியக்கவும்,

''சந்தேகமாகத்தானே நீ நடந்து கொண்டாய்'' என சிரித்தான் ராஜா.

''முதலில் கல்யாணத்திற்கு இஷ்டமில்லை என்று ஓங்கிச் சொல்லிவிட்டாய். அதை என்னை பாடாய்ப் படுத்திவிட்டது?''

'அப்படியா?' என்று வியந்தவளை பொய்க்கோபத்துடன் முறைத்தவன் தொடர்ந்து. ''உண்மையிலே உனக்கு இஷ்டமில்லையா... என்னைப் பிடிக்காமல் போயிற்றா... என்ற சந்தேகம் என்னை விரட்ட ஆரம்பித்துவிட்டது. அந்தத் தவிப்பில் தான் அப்படியெல்லாம் நடந்து கொண்டேன். உன்னிடம் கொஞ்சம் முரட்டுத்தனத்துடன் வெறுப்பையும் காண்பித்தேன். ஆனால் அப்போதும் என்னால் உன்னுடைய நிலைமையை கண்டுபிடிக்க முடியவில்லை. அதனாலே....''

ராஜா இழுக்க, கவிதா, ''அதனாலே... நிர்மலாவை நடிக்க வைத்து கண்டுபிடிக்க பார்த்தீர்களாக்கும்...'' சிரிப்புடன் முடித்து வைக்க. ராஜாவும் சிரித்தான்.

''ஆமாம்... நிர்மலா குறுக்கிட்டதும், உன்னுடைய தோழி லதா மூலம் நிர்மலாவை எனது காதலி போல் ஒரு பொய்யை பரப்பிய பின்தான் நீ வெளிவர ஆரம்பித்தாய். எங்கே நான் கிடைக்காமல் போய் விடுவேனோ என்று நீ துடிக்க ஆரம்பித்திருப்பதும் எனக்குப் புரிய ஆரம்பித்

தது..'' சொல்லிய ராஜா நிறுத்திவிட்டு, ''என்ன சரிதானே?'' என கேட்கவும் கவிதா முகம் சிவந்து போனாள்.

''சரிதான்...! அப்படிப் புரிந்ததும், என் மனநிலையை கண்டுபிடித்ததும் எனக்குத் தெரியாமல் கல்யாண ஏற்பாடு கூட செய்து விட்டீர்களே..?''

''ஆமாம்... எனக்குக் காத்திருப்பது என்றுமே பிடிக்காது. அதனாலே கண்டுபிடித்ததும் உடனே நாள் குறித்து ஏற்பாடுகளை பண்ண அம்மாவிடம் சொல்லிவிட்டேன்...'' என்றவனை குறும்புச் சிரிப்புடன் கவிதா பார்த்தாள்.

''அப்படியானால் என்னுடைய சம்மதம்? இன்னும் அதை நான் என் வாயால் சொல்லவில்லையே?''

கவிதா சொன்னதற்கு ராஜா கொஞ்சமும் அசரவில்லை. டக்கென நெருங்கி வந்தவன் அப்படியே அவளைத் தாவிப் பிடித்து இறுக்கினான். ''அதை நீ சொல்லாமலா போய் விடுவாய்?'' என்று முணுமுணுத்தவனிடம் அவசரமாய் ஞாபகம் கொண்டவளாய். ''ஐயோ... நிர்மலா வேறு எதிரில்...'' என்று இழுத்தவளிடம், ''அவள் நம்மை தனிமையில் விட்டு விட்டு போய் வெகுநேரம் ஆகிவிட்டதே...'' என்று அவளது தவிப்பை அடக்கியவன் மேலும் அவன் இறுக்கியவனாய்... அவளது செவ்விதழ்களை நோக்கி முன்னேற ஆரம்பித்தான்.

அப்படியே அவனது அணைப்பில் கட்டுண்டு தன் வசமிழந்தவளாய் வெட்கம்படரக் கண்களை மூடிக் கொண்டாள் கவிதா.